சிவாஜி

இந்திய வைத்தியமுறை ஆராய்ச்சி

மேல்நாட்டு மருத்துவமும் கீழ்நாட்டு மருத்துவமும்

இணைப்பு அவசியம்.

"வைத்திய விஞ்ஞான, கலைவளர்ச்சிக்கு இந்திய வைத்திய முறை பெருமளவில் தொண்டு புரியும் வகையில், இந்திய வைத்திய முறை விஷயத்தில் ஆராய்ச்சிகள் நடத்துவது மிக அவசரமாகவும் அவசியமாகவும் செய்யவேண்டிய காரியமாகும். பல நூற்றாண்டுகளாக மாறுதலடையாமல் ஒரே நிலையில் இருந்துவரும் இந்திய வைத்திய சாஸ்திரம் இந்த ஆராய்ச்சியின் மூலம் இந்நாட்டு மக்களும் உலக மக்களும் க்ஷேமமுறும் பொருட்டு மீண்டும் அரிய பணி புரியும்" என்று, இந்தியாவின் நாட்டு வைத்திய முறை பற்றிய கமிட்டி, இப்பொழுது வெளியிட்டுள்ள அதன் அறிக்கையில் கூறுகிறது. இக்கமிட்டி கர்னல் என். சோப்ராவின் தலைமையில் 1946 டிசம்பரில் இந்திய சர்க்காரால் அமைக்கப்பட்டது. கமிட்டி செய்துள்ள மிக முக்கியமான முடிவுகள் கீழே சுருக்கமாகத்தரப்படுகிறது.

மேலை நாடுகளின் வைத்திய முறையால் இந்தியாவில் தற்போது கிடைத்து வரும் வைத்திய வசதிகள் மிக மிகச் சொற்பமேயாகும். இந்திய வைத்திய முறை, வளர்ச்சி பெறாமல் அப்படியே இருந்து வந்த போதிலும், இந்தியாவில் இன்னமும் பிரபலமாக இருந்து வருகிறது. பொது ஜனங்களில் பல்வேறு பிரிவினரும் பெரும்பாலும் இந்திய வைத்திய முறையையே நாடுகின்றனர். அரசாங்கத்தால் ஆதரவளிக்கப்பட்டு அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வரும் மேலை நாட்டு வைத்திய முறையில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளைப் பூர்த்தி செய்ய இது உதவி வருகிறது.

இந்திய வைத்திய சாஸ்திரம், பயன்படக்கூடிய பல விஷயங்களை முக்கியமாக சஸ்திர சிகிச்சை, பிரசவகால சிகிச்சை, உடற்கூறு, இரத்த பரிசோதனை, நோய்களைக் கண்டறியும் முறைகள் ஆகியவற்றை, மேலைநாட்டு வைத்திய சாஸ்திரத்திலிருந்து கிரகித்துக்கொள்ள முடியும் என்பதைக் கமிட்டி ஒப்புக்கொள்கிறது. ஆனால், மேலை நாட்டு வைத்திய சாஸ்திரம் இந்திய வைத்திய சாஸ்திரத்திலிருந்து எடுத்துக்கொள்ளக்கூடிய, இந்திய வைத்திய முறையின் தத்வார்த்த வரலாறு, அதன் பரந்த அமைப்பு, பூமிப் பாங்கு, பத்தியம் ஆகியவற்றிற்கு அது அளிக்கும் முக்யத்துவம் போன்ற முக்கியமான பல விஷயங்களும் இருக்கின்றன, என்று கமிட்டி அபிப்ராயப்படுகிறது.

மேலைநாட்டு முறையென்றோ, இந்திய முறையென்றோ தனித்தனியான இரண்டு வைத்திய முறைகள் இருக்க முடியாது என்று கமிட்டி நம்புகிறது. விஞ்ஞானம் எல்லா நாடுகளுக்கும் பொதுவான விஷயமாகும். அதற்கு வைத்திய சாஸ்திரம் விதிவிலக்கல்ல. நாம் குறிப்பிடும் இந்த வைத்திய 'முறைகள்' உலகத்தின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு காலங்களில் கையாளப்பட்டுவந்த வைத்திய சாஸ்திரப் பிரிவுகளையும், வழிகளையுமே குறிப்பனவாகும். தேக சுகத்தைப் பெறுவதும், நோய்கள் வராமல் தடுப்பதும், நோய்கள் வந்தால் அவற்றைக் குணப்படுத்துவதுமே எல்லா வைத்திய முறைகளின் லட்சியமாகும். இவற்றிலிருந்து வெளிப்படும் மதிப்புவாய்ந்த எல்லா விஷயங்களும் ஒன்று சேர்க்கப்பட்டு எவ்விதப் பாகுபாடுமின்றி, மனிதவர்க்கத்தின் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டும்.

ஒன்றுபடுத்தப்பட்ட இத்தகைய வைத்திய முறையொன்று ஏற்படுவதால் நம்முடைய ஜனங்களுக்கு மேலைநாட்டு வைத்திய சால்திரத்தில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளில் முழுப்பலமும் கிடைப்பதுடன், அவர்களுடைய பழக்க வழக்கங்களுக்கும், இஷ்டத்துக்கும், தேவைகளுக்கும் மிகச் சிறந்த வகையில் ஒத்ததாயிருக்கும் வைத்திய முறையொன்றும் அவர்களுக்குக் கிடைத்துவிடும். மேலும் மருந்துகளின் விலை மிகக் குறைவாக இருக்குமாகையால் அவர்களுடைய பொருளாதார நிலைமைக்கு மிகவும் பொருத்தமானதாயும் இருக்கும்.

ஒன்று சேர்ப்பது சாத்தியமே

மேலை நாட்டு வைத்திய முறையையும் இந்திய வைத்திய முறையையும் ஒன்றாக இணைப்பது சாத்தியம் என்பது மட்டுமல்ல, கிரியாம்சையில் செய்யக்கூடியதுமாகும் என்று கமிட்டி கருதுகிறது. ஆனதால், இது விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

இந்திய வைத்தியக் கல்லூரிகளில் மேலைநாட்டு வைத்திய முறைகள் போதிக்கப்படுவதேபோல், மேலைநாட்டு வைத்தியக் கல்லூரிகளிலும் இந்திய வைத்திய முறைகள் போதிக்கப்படவேண்டும்.

தோளை வலியுடையதாக்கி

தோளை வலியுடையதாக்கி, சோர்வும் பிணிபலவும் போக்கி அரிவாளைக் கொண்டு பிளந்தாலும் கட்டுமாறு உடலுறுதி தந்து தவமேன்மை கொடுத்தருளல் வேண்டும் என்று பாரதி பாடினார். "சீரான உடலில் சீரான மனம்" என்று லத்தீன் பழமொழி ஒன்றுண்டு. பிரிட்டனில் வாலிபருக்கு தேகப்பயிற்சியும், உடல் வலிவும் தரும் கழகங்களுள் முக்கியமான லோபரோ கலாசாலையில் நடக்கும் உடல்வலிப் பந்தயம் ஒன்று மேலே இடம் பெற்றிருக்கிறது. இத்தகைய கழகங்கள் நம் நாட்டிலும் நிறையத்தோன்ற வேண்டியது அவசியமல்லவா?

பாரதத்தின் பண்டைச் சிறப்பைத் திரும்பவும் நிலைநாட்டி, சோம்பிக் கிடந்த மக்களைத் தட்டி எழுப்பிப் புத்துயிரளித்து ஸ்வதந்திரமான நல்லரசின் கீழ் அவர்கள் கௌரவ வாழ்வு வாழச் செய்யவேண்டும் என்ற தன் மகத்தான கனவை நிறைவேற்றச் செயலில் முனைந்துவிட்ட சிவாஜியின் பூர்வீக ராணுவ வேலைகள் முடிந்து சற்று ஓய்வு ஏற்பட்டது.

மேல் கடலுக்கு இணைநேராக அதன் அலைமோதலை அரவணைப்பதுபோல் ஓங்கி நின்ற மலைகளின் வரம்பிலும் கிழக்கேயுள்ள சூழ்புறத்திலும் ஒரு பெரிய கோட்டை வளையம் இப்போது சிவாஜியின் வசமிருந்தது. கட்டுக்கோப்பான சிறு ராணுவம் ஒன்றும் கைப்பற்றப்பட்ட சில தளவாடங்களும் இருந்தன.

ஆனால் இச்சிறு மலை நாட்டுப் படையையும், தளவாடங்களையும் வைத்துக்கொண்டு உடனடியாகப் பெரும் போரில் இறங்க முடியாதென்று சிவாஜிக்கு நன்றாகத் தெரியும். இந்த உண்மையை அவன் ரொம்பத் தெளிவாக அறிந்திருந்ததனால் தான் எவ்விதமான நேரடி யுத்தத்திலும் ஈடுபடாமல் ராஜ தந்திரத்தோடு சமாளித்து வந்தான்.

இந்திய சரித்திரத்தில் கொரில்லா யுத்தத்தின் ஆதிநாயகன் சிவாஜி தான் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

சிவாஜிக்குக் கிடைத்த சிறு ஓய்வும் இன்பம் நிறைந்த பொழுது போக்காக இருக்கவில்லை. உண்மையில் அது ஓய்வே அல்ல என்று கூடச் சொல்லிவிடலாம்.

ஏனெனில், அந்த இடைக்காலத்தில் அவன் எவ்வித ராணுவ நடவடிக்கையிலும் ஈடுபடவில்லையானாலும், தான் கைப்பற்றியிருந்த கோட்டைகளை வலுப்படுத்தவும், ராணுவத்தை ஒழுங்கு செய்யவும் வேலை சரியாக இருந்தது.

ஃ ஃ ஃ

பதின்மூன்றும் அத்தியாயம்

தாதாஜி மறைவு

1647-ம் ஆண்டின் முற்பகுதியில் ஒரு நாள் புரந்தர் கோட்டையில் சிவாஜி தன் படைவீரருடன் சல்லாபித்துக் கொண்டிருந்தபோது புனாவிலிருந்து ஒருவன் படபடப்போடு ஒரு சேதி சுமந்துவந்தான்.

குரு தாதாஜி திடீரென்று படு படுக்கையாகிவிட்டாரென்றும் உடனே சிவாஜியைப் பார்க்க விரும்பினாரென்றும், அன்னை ஜீஜா ரொம்பக் கவலை கொண்டிருந்தாளென்றும் அவன் சேதி கூறினான்.

சிவாஜி ஒரு கணத்தில் துடிதுடித்துப் போய்விட்டான். உணர்ச்சிகளை அடக்கும் ஆண்மை படைத்திருந்த அக்கர்ம வீரன் கூட ஒரு கணத்தில் உள்ளம் சிதறிப்போய்விட்டான்.

கோட்டையை விட்டு வேகமாக வெளியே வந்து தன் குதிரையின் மேலேறி வாயுவேக மனோவேகமாகத் தன் வாசஸ்தலத்துக்கு விரைந்தான்.

சிவாஜி தன் மாளிகை சேர்ந்தபோது இரவு நெருங்கும் சந்தியாகாலம். அந்த மாலை மங்கலில் அந்த மாளிகையே சோகத்தில் ஆழ்ந்திருப்பது போலவும், சூழ்புறத்திருந்த வயல் வெளிகளும், தூரத்தே தெரிந்த மலைகளும், குன்றுகளும் கூட இதற்கு அனுஸ்வரமாகத் துயரம் கொண்டாடுவது போலும் அவன் உணர்வுக்குப் பட்டது.

தாழ்வாரத்தைக் கடந்து வாயிற்புறத்து அறையை நோக்கிச் சென்றான் சிவாஜி. அறையின் முகப்பில் அன்னை ஜீஜா கண்ணீர் மல்க நின்றுகொண்டிருந்தாள். அவளை வணங்கிவிட்டு அவள் முகத்தை ஒரு கணம் பார்த்தான்.

பின்னர் அறைக்குள் நுழைந்தான். அறையில் பிரகாசமாகக் குத்து விளக்கொன்று நின்று எரிந்துகொண்டிருந்தது. நேரே விளக்கருகே சென்று அதைத் தூண்டிவிட்டுக்கொண்டே சில மந்திரங்களை முணுமுணுத்தான் சீடன் சிவாஜி.

பலகணியோரமாகப் படுக்கையில் படுத்திருந்தார் தாதாஜி. அவராருகே வைத்தியர் ராம்ஜி உட்கார்ந்திருந்தார். தாதாஜியின் கண்கள் மூடியிருந்தன. இதயத்தில் தோன்றியிருந்த பொறுக்க முடியாத வலியினால் அவர் முனகிக்கொண்டு, கனமாக ஸ்வாசித்துக்கொண்டிருந்தார். வைத்தியர் முகத்தில் நம்பிக்கையொளி காணப்படவில்லை.

அவர் மௌனமாக இருந்தார். திறந்திருந்த பலகணி வழியே வெளிப்புறத்தில் படர்ந்திருந்த இருள் அறைக்குள் நுழைய விழைந்துகொண்டிருந்தது.

படுக்கையருகே தலை குனிந்து நின்றுகொண்டே "குருஜி, சீடன் சிவாஜி வந்திருக்கிறேன்" என்று மெதுவாகக் கூறினான் சிவாஜி. அங்கு நிலவிய மௌனத்திடையே சிவாஜியின் அறிவிப்பு அருவியின் ஓசை போன்று ஊடுருவிப் பாய்ந்தது.

தாதாஜி கண்களை மெதுவாகத் திறந்தார். அவற்றில் ஒரு மகத்தான ஒளி தென்பட்டது. மிகுந்த சிரமத்துடன் தம் குரலை எழுப்பி "அருகே உட்கார் அப்பா" என்று ஆக்ஞையிட்டார் குருஜி. சிவாஜி அருகே சென்று உட்கார்ந்தான்.

தாதாஜி சிவாஜியின் வலக் கரத்தைப் பற்றித் தன் மார்பின் மேல் வைத்து வருடிக் கொண்டே பேச ஆரம்பித்தார்.

"இந்த ஒளி நிற்காதென்பது நிச்சயம். நான் விடுதலை பெறும் தருவாயிலிருக்கிறேன். ஒரே விஷயம் உனக்குச் சொல்ல வேண்டுமப்பா. உனது ராணுவ நடவடிக்கைகளைப் பற்றி எனக்கு ஏதாவது அபிப்ராய பேதம் இருந்ததென்றால் அது உன் நலத்தை உத்தேசித்துத்தான். வேறொன்றுமில்லை. என்னைக் குறித்து வருத்தமடையாதே" என்று கூறினார் தாதாஜி.

"அப்படியொன்றுமில்லை, குருஜி. உண்மையில் தங்களிடம் மன்னிப்புக் கோரவேண்டியவன் நானே. நான் தங்களுக்கு ஏதாவது துயரம் இழைத்திருந்தால் என் குற்றங்களை மன்னித்து விடுங்கள்" என்றான் சிவாஜி.

தாதாஜி சிறிது மௌனமாக இருந்து, திரும்பவும் பேச ஆரம்பித்தார்.

"அப்படியொன்றுமில்லையப்பா, உன் பேரில் எனக்கு வருத்தமேயில்லை. என் வாழ்க்கையில் நீ எனக்குச் சீடனாகக் கிடைத்தது புண்ணிய வசமே. உன் பிற்காலம் பற்றி எனக்கு அளவிறந்த நம்பிக்கை இருக்கிறது. நாட்டுக்கே மகத்தானதொரு சாதனையை நீ புரியவிருக்கிறாய் என்று தெரிகிறது. உன் லட்சியம் சித்திபெறுமாக. இதோ, உன் தாய் இருக்கிறாள். அவள்தான் இனி உனக்கு எல்லாம்...... என்னால் பேச முடியவில்லை......ம்" என்று பெருமூச்செறிந்தார் குரு தாதாஜி. அப்புறம் அவர் பேசவில்லை. சில கணங்களில் அவர் மூச்சு நின்றுபோய்விட்டது.

சிவாஜி படுக்கையின் மேல் தலைசாய்த்துத் தேம்ப ஆரம்பித்தான். மகத்தானதொரு செல்வத்தை இழந்த துயரம் அவனைக் கவ்விற்று. 'அவன் இதயம் பிளந்துவிடும் போலிருந்தது

அன்னை ஜீஜா அறைக்குள் நுழைந்து தனயனைக் கைகொடுத்து வெளியே அழைத்துச் சென்று ஆசுவாசப்படுத்தினாள். வைத்தியர் ராம்ஜி எழுந்து வெளியே போய்விட்டார். விளக்கின் ஒளி மங்கி அணைந்தது.

வெளியே இருள் சூழ்ந்திருந்தது. அன்னை ஜீஜாவும தனயன் சிவாஜியும் மாளிகையின் பின்புறத்துத் தோட்டத்துக்குச் சென்றார்கள். அங்கும் இருள் தான் படர்ந்திருந்தது.

தோட்டத்தின் நடுவே ஓங்கி வளர்ந்திருந்த மாமரத்தினடியில் இருவரும் சென்று நின்றார்கள். அன்னை ஜீஜா தனயனுக்கு ஒரு பழைய சம்பவத்தை ஞாபக மூட்டினாள்.

"இந்தத் தோட்டம் தாதாஜியின் புனிதக் கைகளால் உருப் பெற்றது. இந்த மாமரம் அவரது நினைவுக்கு சாஸ்வதமான சின்னம். இதன் பழத்தை உன்னைத் தவிர வேறெவரும் எடுக்கக் கூடாதென்று உத்திரவிட்டிருந்தார் தாதாஜி. ஒரு நாள் பிற்பகலில் தாமே ஒரு பழத்தை எடுத்துச் சுவைத்துவிட்டார். தமது உத்திரவு ஞாபகம் வந்தபோது தானே அதை மீறிவிட்டது குறித்துக் கழிவிரக்கப்பட்டுத் தன் வலது கரத்தை வெட்டிக்கொள்ள முனைந்தார். அப்புறம் எல்லோரும் வேண்டிக் கொண்டதன் பேரில் அன்று துவங்கி தமது வலது கரத்தை மூடிக்கொண்டே தம் வாழ்க்கையைக் கழித்து விட்டார்."

அன்னை மௌனமானாள். சிவாஜியின் தேம்பல் அதிகமாயிற்று. அவன் உருகிவிட்டான்.

தாதாஜியின் மறைவின் மூலம் சிவாஜி ஒரு மகத்தான குருவை இழந்துவிட்டதுடன், குடும்ப ஆலோசகரையும், நிர்வாகியையும் துறக்க வேண்டி நேர்ந்தது. தாதாஜியின் பிரிவு சிவாஜியைப் பெரும் துயரில் ஆழ்த்திவிட்டது. (தொடரும்)

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய
குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனால் டாக்டர்கள்
இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

மனைக் கல்வி

ஒவ்வொரு குடும்பமும் அதில் பிறந்து வளரும் குழந்தைகளுக்கு முதல்தரமான பள்ளியாக இருக்குமாறு செய்ய நாம் முயற்சிக்க வேண்டும். ஒவ்வொரு தாயும் இப் பள்ளியின் திறமையுடைய பிரின்சிபாலாக இருக்க விழைய வேண்டும். குழந்தைகள் சரியான முறையில் சிந்திப்பதுடன், உணரவும் பயிற்சியளிக்கப்பட வேண்டும்.

—ராஜாஜி.

சிவாஜி

ஆசிரியர் :—திருலோக சிதாராம்

கோட்டை 14	திருச்சி, 27—2—49 சர்வதாரி-ஞு மாசி-மீ, 16-உ	முற்றுகை 22

க்ஷேத்ர கணிதம்

"க்ஷேத்ர கணிதம் தெரியாதவர்களுக்கு இங்கு இடம் கிடையாது" என்று பிளேடோ கிரேக்க அகாடமியின் வாயிலில் பொறித்து வைக்கச் சொன்னான். க்ஷேத்ர கணிதம் தெரிந்தவர், தெரியாதவர் எல்லோருக்கும் நமது கல்வி நிலையங்கள் இடமளிக்கவேண்டும்!

— மௌலானா ஆஸாத்

சென்னைக்கு சர்தார் படேல் விஜயம்

அரசியல் ஆராய்ச்சியும் எச்சரிக்கையும்

இந்தியாவின் உதவிப் பிரதமரும், ராஜ தந்திரியுமான சர்தார்படேல் பதினேரு ஆண்டுகளுக்குப்பிறகு சென்னைக்கு இரண்டாம் முறையாக விஜயம் செய்து நாட்டின் அரசியல், பொருளாதார நிலையை விரிவாக மக்களுக்கு எடுத்துக்கூறி, எச்சரிக்கையும் விடுத்துத் திரும்பியிருக்கிறார். சர்தாரின் முதல் விஜயம் சுமார் பதினேரு ஆண்டுகளுக்குமுன்னர் 1937-ம்ஆண்டு டிசம்பரில் நடந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

படேலின் சென்னைச் சொற்பொழிவுகள் செயலாற்றலும், மன வலிவும் படைத்த ராஜ தந்திரியின் பிரசங்கங்களாகவே இருந்தன. நிர்வாகத்துறையில் அரசாங்கத்துக்குள்ள முழுப் பொறுப்புகளையும் நன்குணர்ந்த கர்ம வீரரது அறிவு வேகமே அவற்றில் அதிகமாகத் தென்படுகிறது.

சர்தாரின் இன்றைய செல்வாக்கும், சுதந்திர இந்திய அரசியலில் நிர்மாண வேலைக்கான திறனும் அந்தக்காலத்திலேயே சூக்ஷ்ம உருவத்தில் காங்கிரஸ் கட்சிக்கட்டுக்கோப்புக்குள்ளும், சுதந்திரப் போராட்டத்திலும் கனன்று நின்றிருந்திருக்கின்றன.

வெள்ளையர் நம்மை விட்டுச் சென்ற கையோடு இருந்த முக்கிய பிரச்னையான சமஸ்தானங்கள் பிரச்னையை சர்சார் படேல் ஏற்றுச் செயலாற்றித் தீர்த்து வைத்த மகத்தான வெற்றியே சர்தாரின் நிர்வாகத்திறனுக்கும், ராஜ தந்திரத்துக்கும் மகத்தான எடுத்துக்காட்டாக நிற்பதுடன், அவரது இன்றைய செல்வாக்கின் காரணமாகவும் இருந்திருக்கின்றன.

சென்னை காங்கிரஸ் நடவடிக்கைகள் பற்றியும், அரசியல் பற்றியும் சர்தார் படேலுக்குக் கசப்பான உணர்ச்சிகள்விரோத மனப்பான்மை ஏற்படுமளவுக்கு நிறைந்திருக்கின்றனவோ என்று அரசியல் வட்டாரங்களில் இருந்த அவநம்பிக்கையை சர்தாரின் சென்னை விஜயம் பூரணமாக நீக்கிவிட்டது என்று கூற முடியாவிட்டாலும் ஓரளவு தணித்திருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

முதலாளிகள்

சென்னை வர்த்தகசங்கத்தினர் முன்னிலையில் சர்தார் படேல் பேசுகையில் அவர்களுக்கு அளித்த ஆதரவும், விடுத்த எச்சரிக்கையும் கவனிக்கத் தக்கன.

எல்லாவித தொழில்களையும் தேசிய மயமாக்கும் திட்டம் வரவேற்கத்தக்க லட்சியத்திட்டமேயானாலும், தற்போதைய நிலையில் அரசாங்கம் இந்தப் பொறுப்பை மேற்கொள்வது அநுசிதமென்று குறிப்பிட்டார். உருப்படியான சீர்திருத்தம் செய்யத் தக்க வலுவில்லாமல் தேசிய மயமாக்கும் திட்டத்தைக் கொண்டு செலுத்துவது அவிவேகம் என்பதை எடுத்துக்காட்டினார்.

தேசிய மயமாக்குவதை எதிர்த்து, தம் நலன்கள் பறிபோய்விடுமோ என்று பயந்திருந்த முதலாளிகளுக்கு சர்தார் ஊக்கமளிக்கும் முறையில் "தேசிய மயமாக்கும் திட்டம் இப்போது வரப்போவதேயில்லை. நீங்கள் பயப்படவேண்டாம். இதை வேதவாக்காக எடுத்துக்கொள்ளலாம்" என்று கூறியிருக்கிறார்.

எனினும், முதலாளிகளும் தமது மனத்தைத் தாமே ஆராய்ந்துகொண்டு நேர்மையுடன் நடந்துகொள்ளவேண்டுமென்றும், அவர்களது பழைய நடவடிக்கைகள் பாராட்டுக்குரியதாயில்லையென்றும், தமது மனப்பான்மையை அவர்கள் மாற்றிக்கொண்டாலல்லாது நாடு உருப்பட முடியாதென்றும் தெளிவாக வற்புறுத்தத் தவறவில்லை சர்தார் படேல்.

தொழிலாளர்

தொழிலாளர் விஷயமும் சர்தார் படேலின் முக்கிய கவனத்துக்குப் பாத்திரமாகியிருக்கிறது. வேலை நிறுத்த பயமுறுத்தல்கள் காற்றில் சீறிவரும் இக்காலத்தில் சர்தார் தொழிலாளருக்கு விடுத்த எச்சரிக்கையும் கவனிக்கத்தக்கது.

தொழிலாளரது நியாயமான உரிமைகளுக்கு என்றும் பங்கம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பேயானாலும், உற்பத்திப் பெருக்கமே நம்மை உயிர்ப்பிக்கமுடியும் என்றநிலையில்வேலை நிறுத்தங்கள் நாசவேலைகளே என்று அழுத்தமாகக் கண்டித்தார் படேல்.

ரயில்வே பெடரேஷன் சம்பந்தமாகப் படேல் குறிப்பிட்ட விஷயங்கள் சற்றுக் காரமாகவே இருக்கின்றன என்பதை மறக்கமுடியாது. ஜெயப்பிரகாஷ் நாராயணரது முற்போக்

(6-ம் பக்கம் பார்க்க)

கரூர் டி. மு. கோர்ட்

O. S. 398/48

கரூர் தாலூகா கஸ்பா கரூரிலிருக்கும் வெள்ளியணை அருணாசலம் செட்டியார் குமாரர் நவரத்தினம் செட்டியார் —வாதி

திண்டுக்கல் தாலூகா வந்தக்கோட்டை கிராமம் கஸ்பாவிலிருக்கும் ஷண்முக வேலாயுதம் பிள்ளை குமாரர் கர்ணம் சோமசுந்தரம் பிள்ளை —பிரதிவாதி

ஷை பிரதிவாதிக்கு

ஷை நெம்பர் வாதி உம்மபேரில் பிராமிசரி நோட்டுப்படி ரூபாய் 410—0—0-ம் பின்வட்டியும் கோர்ட்டுச்செலவும் கிடைக்க தாவா செய்து 3—3—49-ல் வாய்தா ஏற்பட்டிருக்கிறது. ஷை தேதி பகல் 10 மணிக்கு நீர் ஆஜராகத் தவறினால் எக்ஸ்பார்ட்டியாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

கரூர் 19-2-49 { K. V. கஸ்தூரி, அட்வகேட்.

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு

அனுபவ ஞானியின் குறிப்புகள்



திருலோக சீதாராம்

நாயுடுவின் காமிரா கண்கள்

இரண்டாவது தடவையான இந்த யாத்திரையின் போது மனோதத்வ ஆராய்ச்சியைப்போலவே காட்சி இன்பத்திற்காகவும் வேடிக்கைக்காகவும்கூட பல அனுபவங்களை நாயுடு அவர்கள் படைத்திருக்கிருர். ஐரோப்பிய அரசியல், சமுதாய அரங்கத்தில் உலகப் பிரசித்திபெற்ற பல இடங்களையும் பல மனிதர்களையும் தன்னுடைய ஏகத் தனித்துணைவனான காமிராவின் கண்வீச்சுக்குள் சிக்கவைக்க அவர் மறக்கவில்லை. புகைப்படங்களில் அந்தப்பெரிய புள்ளிகளின் கையெழுத்துக்களையும் கூடுமானவரையில் சேகரித்திருக்கிருர். நாரதர், ப்ரீ இந்தியா போன்ற பத்திரிகைகளில் நாயுடு அவர்கள் காமிராத்துணை கொண்டு சாதித்த காரியங்களைப் பற்றிய விரிவான பேட்டி ஒன்றை தமிழ் மக்கள் படித்திருக்கலாம். நாயுடு அவர்கள் கூறுகிருர்:—

"புகைப்படங்களையும், பெரிய மனிதர்களின் கையெழுத்துக்களையும் சேர்ப்பது இந்த நூற்ருண்டு இளைஞர்களின் மேனியாவாக இருக்கிறது.

"தேசிய உணர்ச்சிபோன்ற கவர்ச்சிகளினுலும் வீர வணக்கம் புரியும் பக்தியினுலும்கூட இப்படிச் செய்கிருர்கள். ஆனல் நான் காமிராக்கண்களை மேலே நாட்டிலும், இங்கும் காட்சிகளில் திருப்பியதற்குக் காரணம் செய்திகளையும், விஞ்ஞான அறிவையும் சேகரிக்கும் ஒரேநோக்குதான். ஒருகாலத்தில் காமிராவை சதா என்னுடன் வைத்திருந்தேன். கடைசி காமிராவை எங்கே நான்பிரிந்தேன் என்பது சரியாக நினைவில்லை. இப்போது அவ்வளவு கவர்ச்சி எனக்கு இல்லை.

"1935-ல் என்று நினைக்கிறேன். சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தின் ஸ்தாபனத் தலைவரான ஐந்தாவது ஜார்ஜ் சக்ரவர்த்தி காலமான சமயம். என்னுடைய 16 M.M. காமிரா அவருடைய கடைசி யாத்திரைக் காட்சியில் ஒரு பகுதியைப் படம் எடுத்த துண்டு. பக்கிங்காம் அரண்மனையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டுத் தெருக்களில் சென்றபோது ஜனக்கூட்டம் சொல்லிமுடியாது. கூட்டத்தில் சிக்குண்டு ஒருவர் இறந்தேபோய்விட்டார். சுமார் நூற்றைப்பது பேருக்குமேல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்கள். பதினுயிரம் பேருக்கு மேல் முதல் உதவி செய்யவேண்டியதாகவும்கூட நேர்ந்துவிட்டது. அவ்வளவு நெருக்கடியான தருணத்திலும்கூட என்னுடைய படப்பிடிப்பு வேலைக்கு எப்படியோ வசதி கிடைத்துவிட்டது. சில மாதங்களுக்குப் பிறகு ஒலிம்பிக் கண்காட்சி நடைபெற்றது. அப்போதும் நான் அங்குதான் தங்கியிருந்தேன். காக்ஷி 10 நாட்கள் நடைபெற்றது. பிரிட்டிஷ் ஆடோமோபைல் சம்பந்தமான காக்ஷியாளர்கள், டீசல் என்ஜின்கள் பற்றிய சொற்பெருக்கு நிகழ்த்தும்படி கண்காக்ஷிக்கு என்னை அழைத்திருந்தார்கள். மற்ருருநாள் காதலுக்கு பட்டம் துறந்த எட்டாவது எட்வார்ட் அரசர்—இப்போது வின்சர் கோமானுக இருப்பவர்—கண்காக்ஷிசாலைக்கு விஜயம் செய்தார். அந்த சமயத்தில் பார்வையாளர் யாரையும் அனுமதிக்கமாட்டார்கள். அவர் வரும் வாசலில் நின்று அவர் உள்ளே நுழையும் காக்ஷியைப் படம் எடுக்கத் தயாராய் நான் ஒரு ஒதுக்கு இடத்தில் காத்திருந்தேன். பெண்கள் வரிசையாக நின்றிருந்த ஒரு இடத்தில் கொஞ்சம் இடங்கேட்டு அந்த இடத்தில் காமிராவை தயாராக்கி வைத்திருந்தேன்.

"மன்னர் அங்கு வந்து காரிலிருந்து இறங்கும் தருணத்தில் நான் வேகமாக நடந்து நடுப்பாதைக்கே போய்விட்டேன். அங்கு காவல் நின்ற போலீஸ்காரன் என்னைப் பிடித்துக்கொண்டு விட்டான். கழுத்தில் கை கொடுத்து என்னை வெளியேற்ற முயலுவதை அரசர் பார்த்துவிட்டு என்னை விடுவிக்கும்படி உத்திரவிட்டார். அதுவரை தொடர்ந்துவந்த என் துணிவுக்கு அவர் பாராட்டுக்கூடச் சொன்னுர். 20 நிமிஷங்களில் 400 அடி சினிமாப் படமாக அந்தக் காக்ஷியைப் பிடித்துக்கொள்ள வசதி கிடைத்தது.

"1936-ல் ஜெர்மனிக்கே சென்று நாஜித் தலைவர்களைப் படம் பிடிக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது நாஜிப் பட்டாளம் நடைபோட்டு அலகிட்டு வந்தபோது படம் பிடித்துக்கொண்டிருந்த என்னை யாரோ உளவாளி என்று சந்தேகித்துக் கைது செய்துவிட்டார்கள். நான் பொழுது போக்குக்காகப் படம்பிடிக்கும் இந்தியன் என்றும் உளவறியும் தொழில் ஒன்றும் யாராலும் எனக்குத் தரப்படவில்லையென்றும் நான் விநயமாக விளக்கிக் கூறிய போது யாதொரு சந்தேகமுமின்றி என் வேலையைத் தொடர்ந்து செய்துகொள்ள் விட்டுவிட்டார்கள்.

"கொலோன் என்னும் இடத்தில் ஒரு சமயம் இரண்டாவது உலகயுத்தத்திற்குத் தந்தையான பயங்கர அசுரன் என்று வர்ணிக்கப்படும் அந்த ஹிட்லர் விஜயம் செய்தபோதும் நான் அங்கு இருக்க நேர்ந்தது. நான் தங்கியிருந்த விடுதியொன்றிலேயே நாஜிகளின் ஏகத் தலைவனான ஹிட்லரும் தங்கியிருந்தார். அவரை நான் படம் பிடிக்க விரும்புகிறேனென்பதை அந்த விடுதியின் நிருவாகிகளிடம் தெரிவித்து உதவி செய்யும்படி கேட்டுக்கொண்டேன். நாங்கள் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஹேர் லீ என்பவர் எங்களுக்கிடையில் அப்போது துபாஷாக இருந்து உதவினர். ஹிட்லருடன் சம்பாஷிக்கக் கிடைத்த அந்தச் சிறு நேரத்தில் நாங்கள் அரசியல்பற்றி எதுவும் பேசவில்லை. பேசத்தான் என்ன இருக்கிறது? இந்தியா—ஜெர்மனி இவற்றின் கலாசாரம்-பண்பாடு பற்றிய இனிமையான சம்பாஷணை அது. இறுதியாக என் வேண்டுகோளுக்கிணங்கி ஒரு விநாடி என் காமிராவுக்கு முன் அவர் முழுத் தோற்றமளித்து நின்று என்னை மகிழ்வித்தார். சில அடிகள் அவரைப் படம் எடுத்துக்கொண்டு அவற்றிலிருந்து எடுத்த சில நிலைத் தோற்றங்களை (ஸ்டில்) அவரிடம் காட்டி அவருடைய கையெழுத்தும் பெற்றுக்கொண்டேன்.

(அடுத்த பக்கம் பார்க்க)

அடால்ப் ஹிட்லர்

கலோன் நகரில் ஹிட்லர் ராணுவ மரியாதைகளுடன் ஊர்வலம் வந்த காட்சி

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் இடையாது. முப்புவினுல் தயாரிப்பு. வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு சோவுதல் குடல் கொந்தளிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

-(தபால் செலவு தனி)-

Dr. R. P. சாரதி,
மகாத்மா காந்தி
சித்த வைத்யசாலை
தர்மராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்

நாயுடுவின் காமிராக் கண்கள்

(முன்பக்கத் தொடர்ச்சி)

அவருடன் கோயரிங், ஹெஸ், கோயபெல்ஸ் ஆகியோரும இருந்தார்கள். அவர்கள் அனைவருடனும் பேசினேன். ஆனல் அற்புதமான ஆங்கிலத்தில் லீ என்னுடன் நெடுநேரம் பேசினர்.

பிற்காலத்தில் உலக யுத்தம் மூண்ட பின்னர் நான் மேற்கொண்ட மற்ரெரு யாத்திரையின்போது அமெரிக்காவில் தங்கியிருக்க நேர்ந்த காலை சில அமெரிக்க நண்பர்கள் ஹிட்லரின் கையெழுத்துள்ள படத்தை பத்தாயிரம் டாலர்வரையிலும் கூட என்னிடமிருந்து விலைக்குப் பெற முயற்சித்தார்கள். நான் கொடுப்பேனு? ஹிட்லர் காரில் போகும் காட்சிகூட பிடிக்கப்பட்டிருக்கிறது. நான் பிடித்த அந்தப் படங்களை சிலசமயம் ஆராய்ச்சிக்காக வைத்துப் பார்த்ததுண்டு. ஹிட்லருடைய வதனத்தில் உணர்ச்சித் தோற்றங்கள் விசித்திரமானவை. ஒரு படத்தைப்போல மற்ரெென்றில் காணமுடியாது. ஆளை அடையாளம் காட்டக்கூடிய சுபாவநிலை எதுவும் அவருடைய வதனத்தில் நிலையாகக் காணப்படவில்லை. சில படங்களைப் பார்த்தால் அது ஹிட்லர்தானு என்று கூட நம்புவது கடினமாகிவிடும். நானே எடுத்த படங்களில் ஒன்றில் அழகு பொலிந்திருந்த அவருடைய முகபாவம் மற்ரெென்றில் மிகவும் விரஸமான தோற்றத்துடன் இருந்ததென்ருல் பார்த்துக் கொள்ளுங்கள். மிகவுயர்ந்த ரகமான என் புகைப்படக் கருவியில் அப்பழுக்குச் சொல்லமுடியாது. ஆசாமியின் தன்மைக்கு இது உதாரணமாகும்.

"ஜெர்மனியில் நான் தங்கியிருக்கும்போது பண்டித ஜவஹர்லால் நேருவையும் நான் அங்கே சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆனல் அது அவருடைய வாழ்வின் சோகமான கட்டத்தில் நடைபெற்றது. அப்போதுதான் இந்தியாவிலிருந்து சிறை விடுவிக்கப்பட்டு பேடன் வீலரில் தனது அருமைத் துணைவி கமலாவின சிகித்சையின் பொருட்டு வந்திருந்தார். அதுவரையிலும் நான் அந்தத் தம்பதிகளைப் பார்த்துப் பேசி பழகியிருக்காவிட்டாலும் அன்ருடம் ஆஸ்பத்திரிக்குச் சென்று கமலாவின் உடல்நிலைபற்றி தாதிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தவறுவதில்லை. அச்சமயம் அங்கு நான் ஓய்வெடுத்துக்கொண்டு தங்கியிருந்தேன். ஒருநாள் நான் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே சொல்லும்போது அப்போதுதான் உள்ளே நுழைந்துகொண்டிருந்த நேருவை சந்தித்தேன். கமலாவின் உடல் நிலைபற்றி விசாரித்துக்கொண்டே அவருடைய தோற்றத்தைப் படம் எடுத்தேன். அப்போது அவருடைய தோற்றம் கவலை நிரம்பியதாக இருந்தது. மோனத்தில் அடங்கிய முனிவரைப்போல் ஆழ்ந்த சிந்தனை குடிகொண்டிருந்தது அவர் முகத்தில். அவர் அறியாமலே ஒரு நொடியில் நான் எடுத்த படத்தில் அவர் கையெழுத்திட்டுக் கொடுத்திராவிட்டால் அவருடைய படம்தானு என்று கண்டுபிடிக்க முடியாது விநோதமான ஒரு தொப்பியுடன் குனிந்த பார்வையில் பக்கவாட்டில் விழுந்திருக்கும் படம் அது. கமலாநேரு காலமாகிவிட்டார். பின்னர் நேருலண்டனுக்கு வந்திருந்தார். ஆண்ட்ரூஸ், நேரு இருவரையும் சேர்த்து அங்கு படம் எடுத்திருக்கிறேன். நேருவுக்கு அங்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவங்கள் பலவும் என் காமிராவுக்குத் தப்பவில்லை.

"இரண்டாண்டுக்குப் பின்னர் இங்கே இந்தியாவில் திரிபுரிகாங்கிரஸின்போது மேடையில் இருந்துகொண்டே காட்சிகள் எடுத்தேன். ஒருநாள் காலையில் நேருவின் காரியதரிசி உபாத்தியாயா என்னுடன் அன்புடன் பேசிக்கொண்டிருந்தபோது தன் ஜாகையிலிருந்து நேருஜி வெளியே வந்தார். என்னைக் கண்டதும் அடையாளம் தெரிந்துகொண்டு புன்முறுவல் செய்தார். சில விநாடிகள் பேசிவிட்டுப் பிரிந்தார். இந்த சமயத்திலும்கூட என் படப்பிடிப்பு நடைபெறத்தான் செய்தது.

உடல் நலமின்றி ஓய்ந்து போயிருந்த ராஷ்டிரபதி சுபாஷ் சந்திரபோஸ் கூட என் வேண்டுகோளுக்கிணங்கி நின்று உதவி செய்திருக்கிருர். அந்தப் படங்களிலும் அவருடைய அப்போதைய முகபாவங்கள் பளிச் சென்று விழுந்திருக்கின்றன. மகாத்மா காந்தியடிகளுடனும் என் காமிராவுக்குநல்லபரிச்சயம் உண்டு. படம் பிடிப்பவர்களைப் பற்றி மகாத்மா தமாஷாகக் கூறிய விகடத் துணுக்குகளும் உண்டு. நாளாகிவிட்டதால் நினைவில் இல்லை.

1936-ல் பேடன் வீலர் என்ற ஜர்மன் நகரில் மனைவி கமலாவின் சிகிச்சைக்காக பண்டித நேரு வந்திருந்தபோது எடுத்த படம்

"படம் பிடிப்பதற்குத் தயாராய் ஆவலுடன் இருந்த பெரிய மனிதர்கள்—பிரபலஸ்தர்களிலே — நான் முஸ்ஸோலினியைப்போல் ஒருவரைப் பார்த்ததேயில்லை. நான் அவரைப் பேட்டி கண்டபோது ஒரு விநாடி எனக்காகத் தோற்றமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். ஒரு விநாடியல்ல—இஷ்டப்படி – எவ்வளவு நேரமானுலும் தயார் என்று எழுந்து நின்ருர் அவர். படம் பிடித்த பிறகு அவர் கேட்டார் 'ஆமாம், இந்தப் படங்களால் உனக்கு என்ன உபயோகம்?' என்று. அதை இனிமேல் தான் யோசிக்க வேண்டுமென்றும் கூடுமானவரையிலும் நல்ல வழியில் அதை உபயோகிப்பேனென்றும் அவருக்கு உறுதி கூறினேன். ஆனுலும் அந்த மனுஷனுக்கு கொஞ்சம் சந்தேகம்தான். 'என் படங்களைக் கெடுத்துவிட மாட்டாயே' என்று சிரித்துக்கொண்டே தமாஷ் செய்தார். பிறகு கை குலுக்கிவிட்டுவிடையளித்தார்."

ஐரோப்பிய யாத்திரையின்போது இப்படிப் படங்கள் பிடித்த நாயுடு அவர்கள் காமிராவின் துணை கொண்டு இங்கே வந்த பிறகு செய்த விளையாட்டுக்கள் பல கேட்கக் கேட்க ரஸமாக இருக்கும். அவரே சொல்லிக் கேட்கவேண்டும். சமயம் வரும்போது பின்னுல் அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்.

அழைப்பு

(தென்னுப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை)

அருமைத் தமிழர் கலை பயின்று
அன்புப் பயிரும் தலை நிமிர்ந்து
பெருமை பிறங்கிப் பேருலகில்
பெறுதற்கரிய பேறுபெற
உரிமைத்தமிழின் சுவையுணரும்
உயர்ந்த பெரியீர்! இது காணும்
மறுமை தனக்கும் மகிழ் வளிக்கும்
மருவி வாரும் சகத்திரே!

அன்பு பெறுவோம் கலை பெறுவோம்
உண்மைப் பொருளை ஆராய்வோம்
இன்பம் பெறுவோம் நலம் பெறுவோம்
யாவும் பெறுவோம் இந்நிலத்தே!
வன்பு அகற்றி வெறுப்பகற்றி
வேரும் பகைகள் விளைவகற்றி
துன்பமகற்றிச் சுகம்பெறவே
சூழவாரும் சகத்திரே!

சாதிபேதம் எத்தனை தான்
சமயப் பிணக்கு பலகோடி
நீதி அறியா மடமையெலாம்
நீக்கி நன்மை நிலைநாட்ட
ஓதும் கலைகள் நலனுணர
ஒருமை வாழ்வின் பயனடைய
யாதும் பெறவே இந்நிலத்தே
இயைய வாரும் சகத்திரே!

நமக்குள் பிளவு வேண்டுவதேன்
நாமே நம்மைக் கொடுமை செய்து
சுமைக்கு ஆளாய் நின்றிட்டால்
துன்பம் துடைப்பார் யாருளரே!
இமைக்கும் பொழுதில் எல்லோரும்
இன்பத் திருந்தோம் என எண்ணி
நமக்கு உரிய வாழ்க்கைதனை
நாட வாரும் சகத்திரே!

ஒருமை வாழ்வே இந்நிலத்தில்
உயர்ந்த வாழ்வு ஆதலினுல்
அருமை நாட்டின் அல்லலெலாம்
அஞ்சி ஓட ஆண்மையுடன்
பெருமை பெறவே எந்நாளும்
பெருதற்கரிய நலமடைந்து
உரிமை வாழ்வில் உயர்ந்தோங்க
ஒன்ருய் வருவீர் உலகத்தீர்!

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினோம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 27—2—49

பி. ஸி. ஜி.

சில காலமாக நாட்டின் கவனத்தை — முக்கியமாக சென்னை மாகாணத்தின் கவனத்தை 'பி. ஸி. ஜி.' என்றொரு விஷயம் ரொம்பக் கவர்ந்திருக்கிறது.

இந்த 'பி. ஸி. ஜி.' என்பது கொச்சையாகச் சொல்லவேண்டுமானால் ஒரு மருந்து. விளக்கமாகச் சொல்லவேண்டுமானால் க்ஷயரோகத்தைத் தடுக்கவென்று தோன்றியிருக்கும் ஒரு "ஊசி மருந்து" அல்லது 'வாக்சின்,

"வாக்சின் தெரபி" என்று ஆங்கிலத்தில் கூறப்படும் "ஊசி குத்தி மருத்துவமுறை" நவீன கால வைத்தியத்துறையில் ஒரு முக்கியமான பகுதியாகக் கொள்ளப்பட்டு வருகிறது. இந்த "வாக்சின்தெரபி" தோன்றியதற்கு மூலகாரணம் "கிருமி தத்துவம்" தோன்றியதேயாகும். எல்லா வியாதிகளும் கிருமிகளாலேயே உண்டாகின்றனவென்றும் இந்தக் கிருமிகளைப் பிடித்து அழித்துவிட்டால் வியாதி தீர்ந்துபோய்விடுமென்றும் கூறுவதே 'கிருமிதத்துவம்' எனப்படுவது. இந்தக் கிருமிகளைக் கொல்வதுடன், வியாதி வருமுன்னரே தற்காப்பு வாக்சினேஷன் செய்து கொண்டுவிடுவதென்ற முறையே ஊசி குத்தி முறையின் அடிப்படையாகும்.

கிருமி தத்தவமே எல்லா வியாதிகளுக்கும் பொருந்ாதென்பதுடன், இந்த ஊசிகுத்தி முறை சில குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் ஜாக்கிரதையாக அனுஷ்டிக்கப்பட்டாலன்றி பயனற்றுப் போய்விடுமென்றும் மேலும் மகத்தான கெடுதலையும் உண்டுபண்ணிவிடும் என்றும் மக்களிடம் அன்புள்ள—மருந்து வியாபாரிகளல்லாத—பல அறிஞர்கள் போராடி வந்திருக்கிறார்கள் இங்கிலாந்தில் ஸர் ஆல்ம்ராத்ரைட் என்ற பேரறிஞர் இந்த உண்மையைப் பரிசோதனை ரூபமாக எடுத்துக்காட்டிப் பலத்த போராட்டம் நடத்தினார்.

இயற்கை வைத்திய வாதிகளும், இங்கிலாந்தில் 'பெக்யூலியர்' வகுப்பினர் போன்றவர்களும், சுகாதார தத்துவத்தின் அடிப்படையை நன்றாக அறிந்த சென்னை ஏ.வி. ராமன் போன்றவர்களும் வைத்தியத்துறையின் மூட நம்பிக்கைகளை எதிர்த்துப் போராடி வந்திருக்கிறார்கள்.

எந்தக்காலத்திலும் மனித குலம் எல்லா வியாதிகளையும் ஒரே க்ஷணத்தில் தீர்க்கக்கூடிய, சாகாவரம் தரக்கூடிய ஒரு மருந்து எங்கு கிடைக்கும் என்று தேடி வந்திருக்கிறது. அமிருதமென்றும், வேதாந்தியின் கல் என்றும், மான்னா என்றும் புராணங்களில் வழங்கும் அற்புத வஸ்துக்கள் இந்த ஆசையை எடுத்துக் காட்டுகின்றன. இந்த ஆசை இந்தக் காலத்திலும் இருந்துதான் வருகிறது.

மோசமான சமூக ஏற்றத் தாழ்வுகளாலும், ஒழுங்கின்மையாலும், மடத்தனத்தாலும், மனித குலத்தைப் பீடித்துவரும் வியாதிகளை 'அரைகொடி' மருந்துகளால் நீக்கிவிட முயற்சி செய்யும் அவிவேகமும், அயோக்கியத்தனமும் இன்றைய வியாபார உலகின் தனிச் சொத்துகள்.

உடல் குன்றி சோறில்லாமல், காற்றில்லாமல், உடையில்லாமல் தெருக்களில் படுத்துப் புரளும் குஷ்ட—க்ஷயரோகிகள், குமாஸ்தாக்கள், தொழிலாளிகள் சேர்ந்த ஒரு சமூகத்தை ஒரு "பி. ஸி. ஜி." ஊசிகுத்தலால் அமரர்களாக ஆக்கிவிட முடியும் என்று நம்பும் இன்றைய வைத்திய அரசாங்க — பொதுஜன முட்டாள்கள் ராவணனுக்கு பத்து தலைகள் இருந்ததாக நம்பிய (நம்பிவரும்) ஒரு சிறுபான்மை அப்பாவிகளைவிட சமூகத்துக்குப் பெரும் கேடு விளைத்து வருகிறார்கள்.

ஏ. வி. ராமன், ஆல்ம்ராத்ரைட் போன்றவர்களது எச்சரிக்கை இன்றைய மருந்து வியாபாரிகள்—வைத்திய சிகாமணிகள் கலந்த அதிகாரம் படைத்த கட்டுக்கோப்பின் முன் செவிடன் காது சங்காக முடிவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

சமூக அடிப்படையில் மாறுதல் தோன்றி வாழ்க்கை வசதிகள் மேம்பட்டாலன்றி எந்த மருந்தும் யாருக்கும் எவ்வித பலனும் அளிக்க முடியாது என்பதை நாம் உணர்ந்து, செயலாற்றும்போதுதான் மருத்துவ சாஸ்திரம் வியாபாரிகள் கையினின்று விடுபட்டு சுத்த சக்தி படைக்கும்.

அகாலிகள்

சீக்கியர்களில் அகாலி வகுப்பைச் சேர்ந்தவர்கள் இப்போது விரும்பத் தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் காரணமாகவே அரசாங்கம் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கநேர்ந்தது.

தற்போது காவலிலிருக்கும் மாஸ்டர் தாராசிங் என்ற சீக்கியத் தலைவர் இந்திய அரசியலில் பற்பல காலங்களில் பற்பல கொள்கைகளை அனுஷ்டித்து பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்திருக்கிறார். சீக்கியர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கொண்டிருந்த பங்கு மகத்தானதும் பாராட்டத் தக்கதுமாகும். மேலும் பல்தேவ்சிங்போன்ற முற்போக்கான சீக்கியத் தலைவர்களது தலைமையின்கீழ், இந்திய—பாகிஸ்தான் பிரிவினைக் காலத்தில் காங்கிரசுடன் ஒத்துழைத்து இந்தியாவின் ஒருமைக்கு மேலும் பங்கம் நேராதவாறு ஒத்துழைத்திருக்கிறார்கள்.

இத்தகைய சீக்கியரிடையே கசப்புணர்ச்சி தோன்றி நாட்டுக்குக் குழப்பம் விளைக்கும் நிலை ஏற்பட்டிருப்பது வருந்தத் தக்கதே இந்திய ராணுவத்தில் முதன்மையான ஸ்தானமும், மகத்தான பண்டைய சரித்திரமும் படைத்த சீக்கியர்கள் நாட்டின் இன்றைய நிலையில் சமாதான விருத்தமான காரியங்களில் ஈடுபடுவதைத் தற்காப்பு மந்திரி பலதேவ் சிங் எடுத்துக் காட்டி எச்சரித்திருக்கிறார்.

டெல்லியில், தடையுத்தரவுகளை மீறிக் கூட்டம் நடத்துவதாக இருக்கும் பயமுறுத்தலை, அகாலிகள் உடனே மீட்டுக் கொண்டு சமாதானத்துக்கும் சமூக மனப்பான்மைக்கும் வழி வகுப்பார்களென்று நம்புகிறோம்.

சர்தார் விஜயம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கான தலைமையினால் ரெயில்வே தொழிலாளர் சமஷ்டியில் தோன்றியிருக்கும் முற்போக்கு மனப்பான்மையை சர்தார் வரவேற்றிருக்க வேண்டியிருக்க, அதற்குத்தக்க பாராட்டு கூறாமல் விட்டுவிட்டது வருந்தத் தக்க விஷயமே. தர்ம ரீதியில் மாத்திரமன்றி, ராஜ தந்திர ரீதியிலும் சர்தாரின் இக்கருத்து பொருத்தமின்றியே இருப்பது வருந்தத் தக்கது.

சென்னை அரசாங்கத்தையே சீரமைக்கவும், மந்திரிசபையை மாற்றியமைக்கவும்தான் சர்தார் வந்திருப்பதாக நிலவிவந்த வதந்தியைப் பகிரங்கமாகக்கண்டித்து அது தமது வேலையல்லவென்று தெளிவாகக்கூறிய சர்தாரை நாம் பாராட்டாமலிருக்க முடியாது.

காங்கிரஸ்காரர்கள் தமது புதிய ஸ்தானத்தைநன்குணர்ந்து பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் சர்தார் எச்சரிக்கத் தவறவில்லை. சுய நலமும், அதிகார வேட்டையும், பதவி மோகமும் காங்கிரஸ் இயக்கத்தின் மாண்பையும், மகாத்மாவின் கொள்கைகளையும் தகர்த்துவிடும் என்று விளக்கமாகக்கூறினார் படேல்.

சுதந்திரம் பெற்றுத் தவழ ஆரம்பித்திருக்கும் இந்தியக் குழந்தையை ஜக்கிரதையுடன் போஷித்து வளர்க்கவேண்டும் என்ற வேதனையும், கவலையும் கொண்டு நிர்வாகத்திறனுடன் செயலாற்றும் பண்புபடைத்த சர்தார் படேலின் சேவை நாட்டிற்குஇன்றுஇன்றியமையாதது

சிவாஜி சிறுவர் மலர்

ஏராளமான வாசகநேயர்களது வேண்டுகோளிற்கிணங்க அடுத்த மாத ஆரம்பத்திலிருந்து சிவாஜி சிறுவர் மலர் மாத்திரம் தனியே வேண்டுமென்ற அன்பர்களுக்கு அவ்வாறு கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

வழக்கம்போல் சிவாஜி வேண்டுவோருக்கு சிறுவர் மலருடன் சேர்த்து தனிப்பிரதி 2 அணா விலையிலும் சிறுவர் மலர் தனியே வேண்டுவோருக்கு அது மட்டும் தனிப்பிரதி 1 அணா விலையிலும் கிடைக்கும்.

மேலும் சிவாஜியிலும், சிறுவர் மலரிலும் புதிய சுவையான அம்சங்களையும் சேர்க்கவிருப்பதை நேயர்களுக்கு அறிவிக்க விரும்புகிறோம்.

சிறுவர் மலர் தனியாக விற்பனைக்குக் கோரும் ஏஜண்டுகளும், புதிதாக ஏஜன்ஸி எடுக்க விரும்புவோரும் நம் காரியாலயத்திற்கு எழுதி விபரம் அறியவும்.

சிவாஜி (வழக்கப்போல் சிறுவர் மலருடன்)

ஆண்டு சந்தா ரூ. 7—0—0
ஆறுமாத சந்தா ரூ. 3—8—0

சிறுவர் மலர் மாத்திரம்

ஆண்டு சந்தா ரூ. 3—8—0
ஆறுமாத சந்தா ரூ. 1-12—0

"சிவாஜி", தெப்பக்குளம், திருச்சி.

சிதம்பரம் கோமதி

தமிழ் நாட்டில் சங்கீதத்துறையில் முன்னணியில் வந்துகொண்டிருக்கும் இளம் பாடகர் கோஷ்டியில் சிதம்பரம் ஸ்ரீமதி கோமதி தனித்தன்மையுடன் விளங்குகிறார். முறைப்படி குருமுகமாகக் கற்று, வித்வதியானவர். உயர்ந்தபாணி, நிறைந்த கற்பனை, குழைவுடன் கலந்த இனிய குரல், வக்ரம் செய்யாத முகத்தோற்றம் அனைத்தும் சேர்ந்து அன்னாரை சிறப்பிக்கின்றன. சமீபத்தில் பட்டுக்கோட்டையில் நாடிமுத்து பிள்ளை பங்களா கிருகப்பிரவேசத்திலும், தஞ்சை ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் உற்சவத்திலும், திருச்சி கண்காக்ஷி சாலையிலும் அற்புதமாகக் கச்சேரி செய்தார். ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, ஹிந்துஸ்தானி, தமிழ் ஆகிய எல்லாப்பாஷைகளிலும் உருக்கமாகப் பாடுகிறார். மகாமகக் கண்காக்ஷியில் குடந்தையிலும் பாடவிருக்கிறார்.

திருச்சி கண்காட்சி

திருச்சியில் நகராண்மைக் கழகத்தாரால் ஊக்கத்துடன் நடத்தப்பட்டு நல்ல வெற்றியடைந்திருந்த காதிஸ்வதேசி கண்காட்சியில் சென்ற செவ்வாயன்று காலையில் நேர்ந்த தீ விபத்து திருச்சி மக்களுக்குப் பெருத்த மன வருத்தத்தையும் அவமானத்தையும் உண்டாக்கியிருக்கிறதென்று கூறினால் அது மிகையாகாது.

திருச்சி நகரசபைத் தலைவர் டாக்டர் மதுரம் அவர்கள் இக் கண்காட்சியை அமைத்து இயக்குவதில் எடுத்துக்கொண்ட ஊக்கம் வியந்து பாராட்டத்தக்கது. இக் கண்காட்சிக்குப் பொது மக்களிடமிருந்து கிடைத்த ஆதரவு அமோகமாக இருந்தது.

சென்ற செவ்வாயன்று காலையில் "பாஸ்பரஸ்" கண்ணியால் நேர்ந்த தீ விபத்து கண்காட்சியின் முக்கியமான சில பகுதிகளுக்கு நஷ்டமுண்டாக்கிவிட்டதுடன், பொதுமக்களிடையேயும், காட்சிக் கடைகள் வைத்திருந்த 'ஸ்டால்' காரர்களிடையேயும் அவநம்பிக்கையை உண்டாக்கிவிட்டது.

விஷமத்தனமான இந்த அக்கிரம வேலையில் ஈடுபட்டோர் யாராயிருந்தாலும் அவர்களது செயல் அவமானப்படத் தக்கதும், திருச்சிக்கே நாணம் விளைப்பதுமாகும்.

தீயை அணைப்பதிலும், கண்காட்சியில் பங்கெடுத்துக் கொண்ட நிலையங்களுக்கு நேர்ந்த பீதியைத் தணிப்பதிலும் போதுமான பாதுகாப்பும் தைரியமும் பிறப்பிப்பதிலும் ஊக்கமெடுத்துக்கொண்ட திருச்சி ஜில்லா கலெக்டர் திரு. வி. என். ராஜனவர்களுக்கும், நகரசபைத் தலைவர் டாக்டர் மதுரத்துக்கும் நமது பாராட்டுகள் உரியதாகும்.

'தபால் தந்தி இலாகா' வின் ஸ்டாலில் பிடித்த தீ சுமார் முப்பதினாயிரம் ரூபாய் பெறுமான நஷ்டத்தை விளைத்திருப்பதுடன் சுகாதார இலாகா ஸ்டாலுக்கும் சேதம் விளைத்திருக்கிறது.

தீ விபத்தின் பின்னர் சில கடைகளும், நிலையங்களும் பெயர்ந்து போயினும் மற்றும் சில பகுதிகள் அப்படியே இன்னும் இயங்கி வருகின்றன. சில கடைகள் இடம் மாற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன.

கண்காட்சியைத் திட்டப்படி பூரணமாக நடத்திமுடிக்க வேண்டுமென்று ஊக்குவித்த கலெக்டர் ராஜனவர்களது வேண்டுகோளுக்கிணங்கி ஒத்துழைக்கத் துணிவுடன் முன்வந்த ஸ்டால்காரர்களுக்கும் நமது பாராட்டுகள் உரியவையே.

திருச்சியில் காதி கண்காட்சி நடத்தவேண்டுமென்று டாக்டர் மதுரமவர்கள் தலைமையில் நகரசபையினர் ஆலோசனை செய்த காலத்து அது சாத்யமாகுமா என்று சந்தேகமிருந்ததற்கு, கண்காட்சியில் டாக்டர் மதுரமவர்கள் மூலம் திருச்சி கண்டிருக்கும் வெற்றி அமோகமென்றே சொல்ல வேண்டும்.

வேனில் படர்ந்துவரும் மாலையில் இனிய மின்சார விளக்கொளியின் அனுஸரணையுடன் கண்காட்சியில் திருச்சி மக்கள் நடமாடிய கலகலப்பும், குதூகலமும் சென்ற சில வாரங்களில் திருச்சி நகரத்துக்கே புதிய சோபையைக் கொடுத்துவந்தனவென்பதில் சந்தேகமில்லை. தீ விபத்தினால் கண்காட்சியின் ஒரு சிறு பகுதி சிதைந்து விட்டபோதிலும் மக்களது உற்சாகம் குன்றாமல் நிலைநின்றதைக் குறித்துத் திருச்சி மக்களைப் பாராட்டுகிறோம்.

அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்

கைகண்ட மருந்து

எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

ஏஜன்ஸி தேவை

நம் சொந்தகைத்தறி ஸில்க் தயாரிப்பு. விற்பனையாளருக்கும், ஏஜன்ஸிகளுக்கும் 6 ஜெஜம் கலர் ஸில்க் ஸாரி 1க்கு ரூ. 9 வீதம் அனுப்பப்படும். 3 ஸாரிக்கு மேல் ஆர்டர் செய்தால் வி. பி. சார்ஜ் இனம்.

JOTHI FABRICS,

Kottar. Travancore.

கோர்ட் விளம்பரங்கள்

திருச்சி டி. மு. கோர்ட்

O. S. 247/46 E. P. 365/48

S. நரசிம்மன் வகையறா

—வாதிகள்

குருசாமிபிள்ளை வகையறா

—பிரதிவாதிகள்

2-ம் பிரதிவாதி மைனர் ஆரோக்கியசாமிப்பிள்ளைக்காக கார்டியனும் தி. தா. அரியமங்கலத்தில் இருக்கும் குருசாமிப்பிள்ளை பார்யை ரத்தினத்தம்மாளுக்கு நோட்டீஸ்,

தாவாவில் சம்பந்தப்பட்ட ஈட்டு சொத்தை ஏலம் போடவேணுமாய் வாதிகள் மனுக்கொடுத்திருக்கிறார்கள். ஏல விளம்பர நிபந்தனைகளை நிர்ணயிக்க 11—3—49-ல் கெடு போட்டிருக்கிறது. அன்று தேதியில் பகல் 10 மணிக்கு கோர்ட்டில் ஆஜராகி தங்களுடைய ஆக்ஷேபணைகளை தெரியப்படுத்திக் கொள்ளலாம்.

Y. துரைசுவாமி அய்யர்,

வாதிகள் வக்கீல்,

25-2-49 திருச்சி.

திருச்சி சப் கோர்ட்டு

O. S. No. 188/1948

"Achaldas Poolchand" a registered firm represented by its Partner, A. Poolchand Sait —Plaintiff

Mohammad Fakruddin Sahib —Defendant

ஷை நெம்பர் வாதி பிரதிவாதி பேரில் புரோநோட்டின்படி ரூ. 3585—0—0-ம் பின் வட்டி செலவு வகையறா கிடைக்க தாவாசெய்து சாங்கி 7—3—49-ம் தேதி போட்டிருக்கிறது. அன்று பிரதிவாதி ஷை கோர்ட்டில் பகல் 10 மணிக்கு ஆஜராகி கட்சியை தெரிவித்துக்கொள்ளா விட்டால் ஷை தாவா எக்ஸ்பார்ட்டியாக முடிவு செய்யப்படும்.

S. கஸ்தூரிரெங்க அய்யங்கார்,

வாதி வக்கீல்,

25—2—49 திருச்சி.

திருச்சி டி. மு. கோர்ட்

O. S. No. 630 of 1948.

பழனியாண்டி பிள்ளை பார்யை நாகம்மாள் —வாதி

திருச்சி தாராநல்லூர் அலங்கநாதபுரம் பழனியாண்டி பிள்ளை குமாரர் சுப்ரமணியபிள்ளை

—பிரதிவாதி

ஷை பிரதிவாதிக்கு கோர்ட்டார் உத்திரவுபடி நோட்டீஸ்.

உமதுபேரில் வாதி பிராதில் கண்ட சொத்து ஸ்வாதீனம் ஆக வேண்டும் என்றும் மத்ய கால வரும்படி வகையறாவுக்கு தாவா செய்து நீங்கள் ஆஜர் ஆவதற்காக 5-3-49 தேதி காலை 11 மணிக்கு குறிப்பிட்டிருப்பதால் அன்று நீங்கள் ஆஜராகி உமது கக்ஷியை சொல்லிக்கொள்ளாவிடில் ஒரு தலை பக்ஷமாக தீர்ப்பு ஆகிவிடும் அறியவும்.

T. S. Subramanian,

22—2—49 Advocate.

விமர்சனம்

கவிஞன் உள்ளம்

ஆசிரியர் வித்வான் ந. சுப்பு ரெட்டியார், பி. ஏ., பி. எஸ். ஸி. எல். டி வெளியீடு கலைவளர்ச்சிப் பதிப்பகம், துறையூர். விலை ரூபாய் இரண்டரை.

'கவிஞன் உள்ளம்' என்ற இந்நூல் ஒரு கட்டுரைத் தொகுப்பு. ஆக்கியோர் தமது முகவுரையில் கூறியிருப்பது போல "பொதுவாக இலக்கியத்தில் ஒரு சுவையும் சிறப்பாகச் சங்க இலக்கியத்தில் ஒரு விருப்பத்தையும் ஊட்டி விட்டால் எவரும் அவற்றை விரும்பிப் படிப்பார்கள் என்ற எண்ணம் எனக்கு உண்டாயிற்று. அந்த எண்ணமே இந்நூல் தோன்றக் காரணம்". இந்த லட்சியத்தில் இந்நூல் நல்ல வெற்றிகாண முடியும் என்று நம்ப இடமிருக்கிறது. சங்ககாலத்துச் சில பாடல்களின் கருத்தை எளிய நவீன காலத் தமிழ் நடையில் கொடுத்திருக்கும் இந்நூல் ஏற்கனவே இதுபோன்று தமிழில் வெளிவந்துள்ள சில நூல்களின் பால் சார்ந்து நிற்கிறது—குணத்தில்.

ஆசிரியர் தமது முகவுரையில் 'இலக்கியத்திறன் ஆய்வு' பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இது விஷயமாக அவர் தெரிவித்துள்ள கருத்துகள் இக்கட்டுரைகளின் லட்சியமாகத் திகழ்வதுடன் தமிழ் இலக்கியத்திற்குப் புதுமை யேற்ற விரும்புவோரின் முயற்சிகளில் இதுவும் சேரத்தக்கது என்று வற்புறுத்துகின்றன.

'கவிஞன் உள்ளம்' சங்க இலக்கியத்தில் நவீன காலத் தமிழ் வாசகனுக்கு ரஸனையூட்டும் என்பதில் சந்தேகமில்லை.

'கவிஞன் உள்ளம்' வரவேற்கத் தக்க கட்டுரைத் தொகுப்பு. பண்டைய இலக்கியங்களில் நம் காலத்தவருக்கு விருப்பூட்ட விழையும் கருத்தில் வெற்றி காணுமென்றே நினைக்கிறேன்.

"ஸ்ரீரா"

ஹைதராபாத்தின் எதிர்காலம்

ஆசிரியர் ஆர். ராமநாதன். கார்த்திகேயினி பிரசுரம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை அணா 12.

ஹைதராபாத் பிரச்னை சாதாரண அரசியல் கணக்குப்படி தீர்ந்துபோன பிரச்னை. இந்தியாவுடன் சேர மாட்டேனென்று சொன்ன சமஸ்தானத்தை ராணுவ பலத்தால் சேர்த்து விட்டதுடன் இந்தப் பிரச்னை தீர்ந்து போய்விட்டது. ஆகவே இன்று ஹைதராபாத் மற்றைய இந்தியப் பிராந்தியங்களைப் போன்ற நிலையையே கிட்டத்தட்ட அடைந்திருக்கிறது.

எனவே ஹைதராபாத்தின் வருங்காலம் பற்றிய 'ஆராய்ச்சி' தனிப்பட்ட விசேஷம் எதுவும் கொண்டதாக இருக்க முடியாது. நிஜாமை 'அனுப்பிவிடுவது', ஜனநாயகம் பண்ணுவது போன்ற வழக்கமான வாசா கைங்கரியங்கள் ஆராய்ச்சியாக முடியாது. எனவே ஹைதராபாதின் வருங்காலத்தைப் பற்றின ஆராய்ச்சி உலகின் வருங்காலத்தைப் பற்றின ஆராய்ச்சி போல் பொதுவான விஷயம் தான்.

ஹைதராபாத், அரசியல்வாதிக்குக் (நம் காலத்து சட்டசபை மண்டூக ரகப்) கொடுக்கும் ரஸனையைவிட சரித்திராசிரியனுக்கு நிறையப் பொருள் கொடுக்கும். மொகலாய சகாப்தத்திலும், பிரிட்டிஷ் சகாப்தத்திலும் ஹைதராபாத்தின் பொருளாதார, அரசியல் நிலைகள் சரித்திர ரஸிகனுக்கு முக்கியமானவை. மூர்ஷித் கூலிகான், முகமது கவான்போன்ற முகமதிய பொருளாதார அறிஞர்கள் பற்றியும், ஹைதராபாதை அடிக்கடி உலுக்கிய பஞ்சங்கள் பற்றியும், அந்தக் காலத்தில் நடந்த நிலச் சீர்திருத்த முயற்சிகள் பற்றியும் அறிந்துகொள்வது ஹைதராபாதின் வருங்கால ஆராய்ச்சியைவிடப் புதுமையாயிருக்குமென்று நினைக்கிறேன்.

விமரிசனத்திலிருக்கும் இந்நூல் சென்ற ஆண்டு ஆகஸ்டில் வெளியான நூலின் திருத்திய இரண்டாம்பதிப்பு. நடையையும் பொருளையும் கொண்டு பார்க்கும் போது இவ்விரண்டாம் பதிப்பு காலந் தாழ்த்ததாக இருக்கிறது என்றே எனக்குத் தோன்றுகிறது. முதற்பதிப்பு போலீஸ் நடவடிக்கைக்கு முன்னர் வெளிவந்ததாகையால் நல்ல பிரசார வேகத்துடன் பொருத்தமாயிருந்தது. ஆனால் இவ்விரண்டாம் பதிப்பு காலப் பொருத்தம், கால சுதந்திரம் இரண்டும் அற்று இருக்கிறது.

—"ஸ்ரீரா",

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57
Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்
டி. எஸ். ஆர்.
கம்பெனியின்

சந்தனாதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.
கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

கிடைக்கப் பெற்றோம்

சதமணிக் கோவை

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு. "இந்நூல் திருக்கயிலாய பரம்பரையில் மெய்கண்ட தேவருடைய சந்தானத்திலே வந்த ஆசிரியர் ஒருவரால் அருளிச் செய்யப்பட்டது என்பதைத் தவிர வேறொன்றும் இப்போது தெளிவாக அறிந்துகொள்ள இயலவில்லை" என முன்னுரை கூறுகிறது. ஆதீன வித்வான் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் பரிசோதித்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ள இவ்வினிய கோவை ஆராய்ச்சியாளருக்கும் இலக்கிய ரஸிகருக்கும் சுவை தரக்கூடியது.

திருச்சி மிராசுதார்

ஆசிரியர் என். எஸ். ராமசாமி அய்யர். கிடைக்குமிடம் 18, அரபிக்குளத் தெரு, தெப்பக்குளம் திருச்சி. விமரிசனத்துக்கு வந்துள்ள இவ்விதழில் வீதிவிடங்கம் மிராசுதார்கள் மகாநாடு பற்றிய செய்திகளும், பிரபல திருச்சி மிராசுதார்கள் பற்றிய குறிப்புகளும் அடங்கியுள்ளன.

தஞ்சைப் பெரிய கோவில்

தஞ்சை வெற்றிவேற் பதிப்பகம், திரு. கே. வி. பக்கிரிசாமியின் இலவச வெளியீடு, தஞ்சைப் பெரிய கோயில பற்றிய சரித்திர வரலாற்றுடன், ஸ்தல விசேடம், ஆலய விசேடம்பற்றிய குறிப்புகளும் இச்சிறு வெளியீட்டில் கொடுக்கப்பட்டுள்ளன.

கே. டி ஆர். சுகந்த பாக்குத்தூள்

வாசனை திரவியங்கள் மூலம் பிரசித்திபெற்ற விஜயபுரம் கே. டி ஆர். கம்பெனியார், சுகந்தப் பாக்குத்தூள் உற்பத்தியிலே கவனம் செலுத்தி, சிறந்த பாக்கைத் தயாரித்து, நமக்கு 'மாதிரி' அனுப்பியுள்ளனர். 'சபாஷ்!' என்று கூறக்கூடிய அளவில் மணமும், சிறப்பும் பொருந்தியிருக்கிறது. அன்பர்களும் சுவைக்க வேண்டுமென்பது நம் அவா.

குளித்தலை டி. மு. கோர்ட்
O. P. 1/49

மனுதார்கள்:- கஸ்பா குளித்தலையிலிருக்கும் அட்வகேட் R. வெங்கட்டராம நாயுடு (1) குதா சிவாயம் சோணங்கிப்பட்டியிலிருக்கும் கிராமமுன்சீப் R. நாராயணசாமி நாயுடு (2)

காலஞ்சென்ற சீதம்மாளுக்கு குளித்தலை கோவாபரேடிவ் அர்பன் பாங்கில் உள்ள பங்குத்தொகைகளுக்கு பாத்திய சர்டிபிகேட் வேணுமென்று மனுதார்கள் மனு கொடுத்திருப்பதால் அது விஷயமாய் ஆக்ஷேபணையுள்ளவர்கள் ஷை கோர்ட்டில் 14—3—49 தேதி ஆஜராய்த் தெரிவித்துக் கொள்ளலாம்.

K. திருவேங்கடாச்சாரியார்,
வக்கீல்.
D. கதிர்வேல் சோழயர்,
அட்வகேட்.
17—2—49 குளித்தலை.

EMBROIDERY MACHINE

புதிதாக கண்டுபிடித்த இந்த மிஷின் துணிகள் மீது சுலபமாக நூல் பாட்டர்ன்கள், புஷ்பங்கள் ஸீனரி ஆகியவைகளை போடுகிறது. ஸ்திரீகளுக்கும் சிறுமிகளுக்கும் மிகவும் உபயோகமானது. நான்கு ஊசிகளுடன் மெஷின் விலை ரூ 3-8-0 தபால்செலவு அணா 12. கடிதங்களை ஆங்கிலத்தில் மட்டும் எழுதவும்.

DEEN BROTHERS, ALIGARH 3.

ஆப்டோன் & லைன்
பிளாக்,
சைன் போர்ட்,
ரப்பர்ஸ்டாம்ப்
சீலடுகள்
செய்யுமிடம்

S. R. ப்ரதர்ஸ்
சின்னக்கம்மாளதெரு .... திருச்சி.

இதுதானே உலகம்

(சென்றவாரத்தொடர்ச்சி)

இது நியூஸ்!

பாம்பு-கழுகு-மனிதன் விஷயம் உண்மையோ, பொய்யோ, பேப்பர்லே வந்துவிட்டது. அதே மாதிரி, கோயமுத்தூரில் ஒரு கழுகு தெருவில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தையை தூக்கிப் பறந்தது என்கிற சேதியும் பதினைந்து தினங்களுக்கு முன்பு பத்திரிகையில் வந்த துண்டு. இது மாதிரி அடிக்கடி நியூஸ்வரும். பேப்பரில் ரசமோ சாம்பாரோ—சட்னியோ மிளகாப்பொடியோ தூவ இது மாதிரி விஷயங்களை அச்சிட்டு வைக்கிறார்களோ என்ற சந்தேகம் எனக்கு. 'நாய் மனிதனைக் கடிப்பது நியூஸ் அல்ல, மனிதன் நாயைக் கடித்தால் அது நியூஸ்!' என்று ஆதியில் ஒருவர் இலக்கணம் கண்டதை இவர்கள் இப்பொழுதும் பின்பற்றுகிறார்களோ என்னவோ! எப்படியும் போகட்டும். பார்க்கப்போனால், இவையும் தேவையாகத்தான் உள்ளன. இல்லையெனில், பேச்சும் படிப்பும், சம்பாஷணையும் அன்றாட வாழ்வும் சுவைக்காது. பத்திரிகைகளின் எல்லைக்குள் அடியெடுத்து வைக்காத அற்புதச் செய்திகள் அன்றாடம் அதிகம் கிடைக்கின்றன. ரொம்பச் சுவையான விஷயம் ஒன்று அன்று கிடைத்தது.

தோழர்களின் பேச்சு பாம்புக்கடி, மந்திரம், விஷகடி இறக்குவது, அக்காலமன்னர்கள் முதலியவை பற்றித் திரும்பி, ஏவல் செய்வினை பில்லிசூனியம் ஆகிய விஷயங்களைத் தொட்டு அலசி, பக்திபரவசத்தை எட்டியது. ஒருவர் சொன்னார்: 'ஒரு கிராமத்தில் ஒரு அம்மாள் இருக்கா. முருகன் அவளிடம் நேரே பிரத்தியட்சமாகுது. பக்தர்கள் கேட்பதை எல்லாம் கொடுத்து விடுவாள். பழனி விபூதி வேண்டுமா? பழனிப் பஞ்சாமிர்தம் வேண்டுமா? பழனி வேலாயுதம் வேணுமா? எல்லாம் வரவழைத்துக் கொடுத்துவிடுவா'

இது பிரமாதமில்லை. 'ஏவல்' பற்றி அறிந்தவர்களுக்கு இது புதுமையேயில்லை. அதை நாங்கள் மூவரும் சொன்னோம். நாலாமவர் மேலும் குறிப்பிட்ட விஷயம்தான் முக்கியமானது. 'குழந்தைக்கு தலைமுடி இறக்கும் வேண்டுதலனு சொன்னா, குழந்தையை வாங்கி தாம்பாளத்திலே வைத்து, படத்தின்முன் காட்டி முருகா, முருகா என்பாள். உடனே குழந்தைக்கு மொட்டையடிக்கப்பட்டு, பழனியில் செய்கிறமாதிரி சந்தனமும் பூசி விபூதியுமிட்டு இருக்கும்' என்றார்.

இதைக்கேட்டதும் இயல்பாக எல்லாருக்கும் சிரிப்புதான் வந்தது. 'இல்லைங்க. நிஜமா இப்படியே நடக்குதுங்க. பெரியவங்க பலபேரு வந்து சோதிச்சுக்கூடப் பார்த்தாங்க' என்றார்.

'பெரியவர்களுக்கும் மொட்டையடிக்கப்படுமா? குழந்தையை கொடுத்துவிட்டு பெரியவர்கள் போய்விட வேண்டுமா? எவ்வளவு நேரமாகும்?' என்றெல்லாம் விசாரித்தேன்.

'பெரிய ஆளுகளுக்கெல்லாமல்லை. சின்னக்குழந்தைகளுக்குத்தான் பழனி மொட்டை. குழந்தையை தாம்பாளத்தில் வாங்கி, நம் முன்னாலேயே படத்துப் பக்கம் காட்டி முருகா, முருகா என்பாள். உடனே மொட்டையாகி சந்தனமும் விபூதியும்....' என்று தனது பாடத்தை ஒப்புவித்தார்.

எங்கள் சிரிப்பு ஓடுங்கவில்லை. விஷயமறிவித்தவர் இப்படி நடக்கத்தான் செய்கிறது என்று கூறிக்கொண்டிருந்தார்.

மயக்கு வேலைகள்

இத்தகைய எத்து வேலைகள் பண்ணி பணம் பிடுங்கப்படுகிறது நாட்டிலே. மதம், கடவுள் முதலியபெயரைச்சொல்லி, மக்களின் அறியாமையை பயன்படுத்திக்கொண்டு, பிறர்ஏமாந்த வேளையிலே ஏற்றம் கொண்டு விடுகிறார்கள்—அல்லது, உயர முயலுகிறார்கள் பலர். பட்டிக்காடுகளில் மட்டுமல்ல. பட்டணங்களில் கூடத்தான். சென்னையில் 'பார்க்பேர்' என்று விநோதக் காட்சி நடந்தது. அதில் ஒட்டிக்கொண்டிருக்கும் இரட்டையர்கள், ஆறுகால் பிராணி, இரண்டு தலை ஆடு, என்று எழுதிவைத்து, தனித்தனிப் பகுதிகளில் 'பொம்மை காட்டி' ஏமாற்றிக் காசு சேர்த்தார்கள். நான்போய் ஏமாறவில்லை. ஏமாந்தவர்கள் சொன்னார்கள். இருபது வருஷங்களுக்கு முன்பு—நான் பிரைமரியைத் தாண்டாத காலத்திலே—எங்களூர் சந்தை மைதானத்தில் டேரா அடித்து இதுமாதிரி எத்துவேலையைக் கையாண்டார் வெற்றிகரமாக. இந்த 1949-ம் ஆண்டிலேகூட பட்டணத்தில் இந்த பிஸினஸை செய்ய முடிகிறதென்றால் நாட்டுநிலை எப்படி இருக்கிறது என்று நீங்களே கணக்கிட்டுக்கொள்ளுங்கள். அறிவு வளர்ந்துவிட்டது என்று சில ஏட்டுக்காரர்களும் பிரசங்கிகளும் கத்தி என்ன பிரயோசனம்? அறிவுக்கு மதிப்பில்லை. அறிவின் விளைவுகளை ஆராய்ந்து உணர வேண்டும் என்று ஆர்வமில்லை. அறிவின் அசுரசாதனைகளைக்காட்டவேண்டுமானால் எத்துவேலைகளையும் இணைத்தால்தான் முடியும் என்கிறது அனுபவம்.

இப்படித்தான் ... ...

கிண்டி இன்ஜினீரிங் காலேஜ் எக்ஸிபிஷனில் செய்தார்கள் அந்தரத்தில் தூக்கி நிறுத்தும் அற்புதம், ஆகாயத்தில் பறக்கும் யோகி, மாயமாய் மறையும் டீஸ்பூன் .... என்றெல்லாம் விளம்பரப்படுத்தி, பத்திரிகைகளிலும் எழுதச் செய்து கும்பல்கூட வழிசெய்து விட்டார்கள். 'என்னவோ ஏதோ' என்று படித்தவர்களும் படியாதவர்களும், ஆண்கள் பெண்கள்குழந்தைகள் எல்லோரும் குழுமினார்கள். ஆறணா கொடுத்து டிக்கட் வாங்கி அறை அறையாக அலைந்து, எதுவும் விளங்காமலே வீடு திரும்பினார்கள் ... மனித மூளையின் அதீத சாதனைகள், இரும்பிலே உழைப்பு உருவாக்கிய உயர்வுகள், அற்புதச்செயல்களின் சிறு சிறு மாடல்கள், அபாரச் செயல்புரிய உதவுகிற பெரிய பெரிய இயந்திரங்கள்—இவ்விதம் சாதாரண மூளைக்குப் புரியாதவிஷயங்கள்எவ்வளவோ. என்னைப்போன்ற எஸ்.எஸ்.எல்.ஸி. மூளைகளுக்கே புரியவில்லை என்றால், சாதாரணமானவர்களைப்போய் சொல்லுவானேன்! மனிதனுடைய மதத்தையும் மனிதனுடைய சிறுமையையும் அங்கு நான் உணரமுடிந்தது.

அங்கே அறிவின்சாதனைகளைக் காட்ட கூட்டம் கூட்டியது சரி. அறிவின் தன்மையை சரியானபடி விளக்கவேண்டுமல்லவா? அதைச்செய்யத் தவறிவிட்டார்கள். 'ஆகாயத்தில் பறக்கும் யோகி' என்று காந்த சக்திக்கு உள்ளாகி வெறும் வெளியிலே சுழல்கிற தட்டுமேல் யோகி படம் ஒன்று நின்றது ... இது காந்தத்தின்வேலைதானே? காந்தம் எங்கே, எப்படி வேலைசெய்கிறது என்றுகேட்டால், சொல்ல மறுத்தார்கள்... 'நியூட்டன் விதியைப் பொய்யாக்கும் பந்து' என்று ஒன்று. உயரே எறிகிற பொருள்கள் திரும்பவும் பூமிக்கே வருகின்றன என்று பூமியின் ஆகர்ஷண சக்தி பற்றியுள்ள 'நியூட்டன்ஸ் லா'வை வாதுக்கிழுக்கிறதாம் கீழே விழமறுக்கிற அந்தப்பந்து. ஓடும் தண்ணீர் ஒரு புனலில் பறந்து விழுகிறபோது, லேசான பந்தை புனல் துவாரத்தருகேயுள்ள நீர்ச்சுழியில் மிதக்கவிட்டு அந்தரத்தில் நிறுத்தமுடிந்திருக்கிறது. அதற்காக? நியூட்டன் உண்மையை அது எப்படி 'இல்லை' என்றாக்கிவிடும்? ஒரு வாளியில் தண்ணீர் எடுத்தக்கொண்டு வேகமாகச் சுழற்றினால், ஒரு துளி நீர்கூடக்கீழே சிந்தாது. அதனால், அது ஆகர்ஷண சக்தியைபொய்யாக்குகிறது என்று அர்த்தம்? சரி. அதுமாதிரி வேடிக்கையாகத் தோன்றுவதைக்காட்டி, அது ஏன், எப்படி, என்ன என்கிற உண்மைகளைக் கூறவேண்டியதல்லவா அறிவின்வேலை. அதைச் செய்யத்தவறிவிட்டார்கள். உடலற்ற பையன் என்று ஒரு பெட்டிக்கு மேல் தலைதெரியும். பெட்டியுள் பார்த்தால் உடல் தெரியாது, எப்படி? பையனின் உடலுக்கு முன்பாகவே ஒரு கண்ணாடியை வைத்துவிட்டார்கள். கண்ணாடியில் பெட்டியின் ஓர்புறம் பிரதிபலித்து, மறுபுறம் மாதிரித் தோன்றும். இடையில் பொருள் இல்லை. உண்மை தெரியாது. சுலபமா இப்படி ஏமாற்றிவிடலாம்; ஆகவேவிழிப்புடனிருங்கள் என்று எச்சரிக்க வேண்டியது அறிவின்வேலை.

பாராட்டலாம்

ஜோஸ்யத்தில் எல்லோருக்கும் ஒரு பற்றுதல் இருக்கிறது. நம்புகிறவர்கள் நடக்கப் போவதை அறியவும், நம்பாதவர்கள் 'சுமமா—என்னதான் சொல்கிறது!' என்று சொல்லியும் ஜோஸ்யம் பார்ப்பதில் ஈடுபடுகிறார்கள். இந்த அரிப்பைப் பயன்படுத்தி, உங்கள் இறந்தகால, நிகழ்கால, எதிர்காலப் பலன்களை பாருங்கள் என்று ஒரு அறையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். பார்த்தால் திரை போட்ட மூன்று பகுதிகள். ஒன்றில், இறந்தகாலம். 'நீங்கள் இருந்தவாறு' என்று குழந்தை பொம்மைகாணப்படும். 'இப்போது உள்ளபடி' என்கிற அறையில் அவரவர் தோற்றம் காண ஒரு கண்ணாடி! 'உங்கள் எதிர்காலம்' எனும் பகுதியில்-ஒரு பிடிமண்! வாழ்வின் உண்மையை இப்படிக் காட்டியது பலருக்குப் பிடிக்கவில்லை. எனினும், இது பாராட்டத் தகுந்த விஷயம்தான்.

துறையூர் டி. மு. கோர்ட்

O. P. No. 3/49

முத்துகிருஷ்ண ரெட்டியார்
—மனுதார்

மனுதார் சம்சாரம் இறந்து போன பூச்சம்மாளுக்கு சேரவேண்டிய S. C. 413/48 தாவாவில் கண்ட தொகையை வசூல் செய்ய வார்சு சர்ட்டிபிகேட் கிடைக்க மனுக்கொடுத்து விசாரணை 12—3—49-ல் வைக்கப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனை உள்ளவர்கள் கோர்ட்டில் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

துறையூர் 18-2-49 } S. லெட்சுமண அய்யர் வக்கீல்.

கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்று வருவது

வீல்மார்க் சென்னீஸ் வைரங்கள் & விக்டரி ஸ்டார் வைரங்கள்

தயாரிப்பவர்:— சென்னி ருதாகிருஷ்ணன், பெரியபஜார், திருச்சினுப்பள்ளி.

சிறு கதை

எதிர்பாராதது

எம். எஸ். ராஜன்

வர்மா என் நண்பன். ஐந்தாவது வகுப்பு முதல் பள்ளிக்கு இருவரும் சேர்ந்தே செல்வோம். வீடு திரும்பும்போது ஒருவர் இல்லாது மற்றவர் வருவதில்லை. வகுப்பில் படிப்பு வரிசையில் இருவரும் ஒரே நிலையில் இருப்போம். பால்ய வயதானாலும் இருவரின் மனப் போக்கும் ஒன்ருகவே இருந்தது.

என் வீட்டில் என் சகோதர சகோதரிகள் நிறைய இருந்தனர். சிறு குழந்தைகள்வேறு. எப்போதும் சந்தைக்கடை போலவே இருக்கும் அமர்ந்து அமைதியாக படிப்பதற்கு எனக்கு இடம் கிடையாது. ஆக வர்மா வீட்டில்தான்என்படிப்பு நேரம் கழியும். வர்மா சகோதரி சாந்தா, தாய் தவிர வேற்ருர் கிடையாது. அவன் தகப்பனர் வெளியூரில் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்துவந்தார்.

வர்மாவுக்கு வீட்டில் தனி அறை. அதில் படிப்பிற்கு வேண்டிய உபகரணங்கள்யாவும் உண்டு. எனக்காக பலவற்றை ஒதுக்கிக் கொடுத்திருந்தான். வர்மா வீட்டில் நானும் ஒருவனுகவே இருந்துவந்தேன். 'டிபன்' நேரத்தில் எனக்கும் டிபனும் காப்பியும் வந்துசேரும். சிலநாள் சாப்பாடுகூட அங்கேதான். அநேகமாக சாந்தாதான் எங்கள் உதவிக்கு வருவாள்!

"சாந்தா! ராஜனுக்கு காப்பி கொண்டுவரலியா! இந்தா அதையும் சேர்த்துகொண்டுவா. அப்பதான் நான் குடிப்பேன்." என்று தனக்குவந்த காப்பியை திருப்பியடிப்பான்." "எனக்கு எப்படி அண்ணு தெரியும் இரண்டு பேருமா இருக்கேள்னு. இதோகொண்டுவரேன்" என்று ஓடுவாள்.

"ஏய்! அந்த டம்ளரை. வாங்கிண்டு இன்னும் ஒண்ணு கொண்டுவான்னு கொண்டுவரா. அதற்காக குழந்தை கொண்டு வந்ததை திருப்பியடித்தா அதன் மனசு புண்படுமடா" என்றேன்.

"களுக்" என்று சிரித்தாள் சாந்தா.

நாங்கள் இருவரும் திரும்பிப் பார்த்தோம். "யாருமாமா குழந்தை; நானு! எங்கண்ணு கோபத்திலே 'கோட்டான்' எனகிருன். நீங்கள் 'குழந்தை' என்கிறேளே. நான் பால் குடிக்கிற பாப்பாவா. சரிதான்." என்று ஒரு போடு போட்டாள்.

நான் அவள் சாதுர்யத்தைக் கண்டு அசந்துவிட்டேன்.

"கழுதை! இது படிக்கிற இடம்னுட்டுநினைச்சயா 'நாடக மேடை'ன்னு எண்ணமா! 'போடீ' என்று விரட்டினன் வர்மா!

"ஏய்! நீ தானேடா காப்பி கொண்டு வரச் சொல்லி அவளை முதலில் விரட்டினே. கொண்டு வந்தப்புறம் என்னடா இப்படி 'சிள்'ளென விழறே" என்றேன். வர்மாவின் அதட்டலில் அடங்கி ஒடுங்கிப்போன சாந்தாவை பார்த்து எனக்கு பரிதாபமாயிருந்தது. எங்களுள் எல்லாவற்றிலும் ஒற்றுமை இருந்தபோதிலும் இந்த விஷயத்தில் வேற்றுமை இருந்து வந்தது.

இன்னெரு நாள்.

அன்று பூகோள வாத்தியார் தென் அமெரிக்காவின் படம் போட்டு வரும்படி கூறியிருந்தார். இரவு 12 மணிவரை மிகக் கஷ்டப்பட்டு அழகாக இருவரும் போட்டு முடித்தோம். பின் நானும் வர்மாவின் அறையிலேயேபடுத்து தூங்கிவிட்டேன் அப்படி அப்படியே டிராயிங் நோட்டுகளும் கலர் பெட்டிகளும் எங்களை சுற்றிக்கிடந்தன. இரவுவெகுநேர முழிப்பால்காலை விழிக்க வெகுநேரமாகிவிட்டது. சாந்தா எங்களை எழுப்ப வந்திருக்கிருள். 'அண்ணு! அண்ணு' என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தவள்வாசற்படியில்பாவாடை சிக்கி தடுக்கி விழுந்தாள். அவள் கை பட்டு திறந்து வைத்திருந்த மைக்கூடு உருண்டது. அழகாக வர்ணம் தீட்டப்பட்டு வைத்திருந்த தென் அமெரிக்கா மை சமுத்திரத்தில் மூழ்கியது. அதுவும் என் நோட்டுதான் இந்த அவதிக்குள்ளாகியது. திடீரெனஎழுந்தவர்மா "ஏண்டி உன்னை இங்கே வராதேன்னு சொன்னேனு இல்லையா" என்று பளார் பளாரென அவளை அறைந்தான்.

எனக்கு நோட்டு வீணுக போனதில் வருத்தம்தான் என்ருலும் வர்மா சாந்தாவை அடித்தது கண்டு கோபம் வந்தது.

"உனக்கு மூளை இருக்காடா, என் நோட்டுதானேடா வீணுயிற்று. அதற்காக நீ ஏன் அவளை அடிக்கிருய்" என்று குறுக்கே நின்றேன்.

"ராஜா நீ நகரு. இது விஷயத்தில் பிரவேசிக்காதே!" என்ருன் வர்மா படபப்பாக. "இது என் நோட்டு வீணுனல் பரவாயில்லை. நீ அடிக்கக்கூடாது" என்று நான் திருப்பிக்கூறினேன். "சாந்தா என் தங்கை! நீ யார் கேட்பது அவளைப்பற்றி" என்ருன் சட்டென.

எனக்கு சுருக்கென தைத்தது.

நோட்டை கையில் எடுத்துக் கொண்டு"சாந்தா! பரவாயில்லை. வருத்தப்படாதே" என்று அவளிடம் சொல்லிவிட்டு நான் என் வீடு நோக்கி புறப்பட்டேன். வர்மா, "ராஜா ராஜா" என்று கூப்பிட்டான். நான் திரும்பிப் பார்க்காமல் வீடு வந்தேன்.

இந்தசிறு சம்பவம்அப்படியே நிலைத்துவிடும் என்று நான் எதிர் பார்க்கவில்லை. அன்றையிலிருந்து நானும் வர்மாவும் பேசுவதில்லை. வகுப்பில் கூட இடம்மாறி உட்கார்ந்தோம். எனக்குமட்டும் அவனுடன் பேசவேண்டுமென எண்ணம். ஜாடையாக இரண்டு முறை முயன்றும் ஆசைப்படுவதாக இல்லை என்பதை அறிந்து நானும் சும்மா இருந்துவிட்டேன்.

ஒரு நாள் என் வீட்டு தெரு வாசலில் நின்றுகொண்டிருந்தேன். அந்த பக்கமாக வந்த சாந்தா, 'ராஜாமாமா'ஏன் நீங்க எங்காத்துக்கே வரலே. எங்களை மறந்துட்டாப்புலே இருக்கு, என்ருள், உங்களை மறப்பதா! அதெல்லாம் இல்லை" என்று உள்ளே சென்று அன்று மையில் மூழ்கிய தென் அமெரிக்காவைக் கொண்டுவந்து காண்பித்தேன்.

"இதாலேதான் இத்தனையும் வந்தது மாமா" என்ருள்.

"இதற்காக வர்மா உன்னை அடிச்சான்பார், மடையன்."

அவள் கண்களில் நீர் சுரந்தது. "மாமா அம்மாகூட அடிக்கடி அண்ணுவை, உங்களைப்பற்றி கேட்பாள். நீங்கவரமாட்டேளா" என்ருள் கெஞ்சியபடியே.

இதற்குள் என் வீட்டில் கூப்பிடவே நான் உள் சென்றுவிட்டேன். அந்த வருஷம் பரிக்ஷை முடிந்ததும் என் மாமாவிடம் செல்லும்படி நேரிட்டது சென்னையில் மேல் படிப்பு படிப்பது என்று முடிவு செய்தபடியால் திரும்பியே நான் வரவில்லை. வர்மாவைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு அவனேடு பேசாதது ஒரு வேதனையாகவே இருந்தது.

அப்படியும் இப்படியுமாக மூன்று வருடங்கள் சென்றுவிட்டன. வர்மா, சாந்தா நினைவுகள் எனக்கு அடிக்கடி நினைவுக்கு வரும். எனக்கும் வர்மாவுக்கும் மனத்தாங்கல் ஏற்பட்ட நிகழ்ச்சி என் மனதைவிட்டு மாறவேயில்லை. அன்று சாந்தா தன் கெஞ்சும் பார்வையில் என் மன்னிப்பைகேட்டது இப்போது கூட என் முன்னிலையில் நின்று கெஞ்சுவதுபோல இருக்கிறது. நான் என் படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு ஊர் திரும்பினேன். இந்த மூன்று வருடத்தில் எங்கள் தெருவில் எத்தனையோ மாறுதல்கள்!

வர்மாவைக்காண அவன் வீடு சென்றேன். அவன் அறை வழக்கமாக சாத்தியிருந்தது. எனக்கு அவன் முன் திடீரென நின்று ஆச்சர்யபடும்படி செய்ய வேண்டுமென எண்ணம். சத்தமில்லாமல் கதவை திறந்து உள் நுழைந்தேன் உள்ளே வர்மா இல்லை. சாந்தா இருந்தாள். எனக்கு பிரமிப்பு தட்டியது. வேறு யார் வீடோ என சந்தேகம். கண்ணை கொடிட் கொட்டி முழித்தேன். வர்மா தங்கை சாந்தாதான், அழகாக இருந்தாள். அவள் உடை மாறுபட்டிருந்தது—உடல் வளர்ச்சி பெற்றிருந்தது. சிறிது நேரம் பிரமிப்பால் ஒருவரை ஒருவர் பார்த்தபடி நின்ருேம். அவள் உதட்டில் ஒருபுன்னகைதோன்றி மறைந்தது

"சாந்தா! என்னை அடையாளம் தெரிகிறதா?" என்றேன்.

முறுவலுடன் தலையசைத்தாள்.

எனக்கு வேறுபேசவே ஒன்றும் தோன்றவில்லை அவள்மீது என் கண் அப்படியே நின்றுவிட்டது. கொஞ்ச நேரம் மௌனமாக நின்ருேம்.

"வர்மா எங்கே? அம்மா சௌக்யமா?" என்றேன் அமைதியைக்கலைக்க.

அவள் முகம் மாறுபட்டது. "வர்மா வெளியே போயிருக்கிருன். அம்மா என்னை விட்டுப் போய் ஒரு வருஷம் போலாகிறது." என்று சொல்லும்போது அவளுக்கு கண்ணீர் ததும்பியது. உதட்டைக்கடித்துக்கொண்டாள்.

நானும் எதிர்பார்க்காத விஷயம். என் மனது 'படக்' என்று அடித்துக்கொண்டது.

"நீயும் வர்மாவும் மட்டும்தான் இருக்கிறீர்களா?" என்றேன்.

"ஆமாம்" என தலையசைத்தாள்.

"முன்போல்............"

"அதெல்லாம் கிடையாது. அம்மாவிற்கு பிறகு அண்ணு ரொம்ப அன்புடனிருக்கிருன்" என்ருள். அதைக்கேட்டதும் என் மனதிலிருந்து ஒரு பெரிய பாரம் இறங்கியது போலிருந்தது.

அவளுடன் பேச ஆசையாய் தானிருந்தது. ஆனல் தனியாக எத்தனை நேரம் இப்படியே பேசுவது என்று "நான் போய் பின் வருகிறேன" என்றேன்.

"ஏன்?" என்ருள் அவள்.

அதற்கு நான் பதில் சொல்லவில்லை. அங்கிருந்த சாய்வு நாற்காலியில்உட்கார்ந்துகொண்டேன்.

(அடுத்த பக்கம் பார்க்க)

கலியாண காலங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பட்டு ஜவுளிகளுக்கும்

பாபு இண்டஸ்ட்ரீஸ்

பிராஞ்சு :— "பாபு ஹால்" சைனுபஜார் ரோடு, திருச்சி.

Slate Manufacturers &
பட்டு ஜவுளி வியாபாரம்
டவுன் ஸ்டேஷன் ரோட்
திருச்சிராப்பள்ளி

ரேகை சாத்திரம்

புத்தி, இருதய ரேகைகள்

“ சிவதாஸன் ”

புத்தி ரேகையின் அமைப்பைப் பற்றியுள்ள விசேடங்களை தொடர்ந்து கவனிப்போம். நாளடைவில் மனிதரின் ஆயுளை குறைக்கக்கூடிய பல வியாதிகளை அறிவதற்கும் புத்திரேகை ஒரு திறவுகோலாக விளங்குகிறது. புத்தி ரேகையில் கருப்பு புள்ளி காணப்படுவது கடுமையான ஜுரத்தை காட்டுகிறது.

இதே கால அளவில் ஆயுள் ரேகையிலும் சுக்கிர ரேகை குறுக்கிடுவதை காணலாம். முக்கோணக்குறி உடலொட்டிய க்ஷய ரோகத்தைக் காட்டுகிறது. நகங்களும் நன்கு அமையாமல் கூடு பாய்ந்து காணப்படும். புத்தி ரேகை மெல்லியதாக இருந்து, ஆரோக்ய ரேகையும் நன்கு பதியாமல் இருந்தால் எப்பொழுதும் உள்ள அஜீரணத்தை காட்டுகிறது. புத்தி ரேகை பாதி கை வரை சென்று பிறகு சுக்கிர மேட்டை நோக்குமானல் காதல் விளைவாக உயிர் முடியும். புத்தி ரேகை இறுதியில் இருதய ரேகையுடன் சேருமானல் அடிக்கடி வரும் மயக்கத்தைக் காட்டுகிறது. புத்தி ரேகை சங்கிலிபோல் காணப்பட்டால் சஞ்சல புத்தியைக் காட்டுகிறது. மன இறுதி இருக்காது. அடிக்கடி மனத் தளர்வு ஏற்படும். இவர்களிடம எவ்விதமான திடுக்கிடும்படியான செய்திகளையும் சொல்லக்கூடாது. அடுத்தபடியாக புத்தி ரேகை ஏணிப்படிபோல் காணப்படுவதும் மிகவும் கெட்டது புத்தி மாருட்டத்தை காட்டுகிறது; தவிற காலப்போக்கில் பார்வை குறைந்துவிடும். இன்னும் பலவிதமாக புத்தி ரேகையின் அமைப்பு காணப்படுகிறது. இயற்கையாக காணப்பட வேண்டியதைத் தவிற வேறு எப்படி காணப்பட்டாலும், மூளையின் பலவீனத்தை காட்டுகிறது. நன்கு அமைந்த புத்தி ரேகை, ஆயுள் ரேகையிலிருந்து சற்று தள்ளி குருமேட்டுக்கடியில் உற்பத்தியாகி, தங்கு தடையில்லாமல் செவ்வாய் மேட்டில் நேரே செல்லவேண்டும். திடமான புத்தி, நீண்ட ஆயுள், சாந்த குணம் இவைகளை காட்டுகிறது. எடுத்த காரியத்தை முடிப்பார்கள். செவ்வாய் கிரகத்தின் நல்ல குணங்களை அடைகிருர்கள்.

இருதய ரேகை

மூன்ருவதாக கவனிக்கவேண்டிய இருதய ரேகை. புத்தி ரேகையும், இருதய ரேகையும் இரு கண்கள் போல பிரகாசிக்கின்றன. புத்தி ரேகை மூளை அமைப்பு, வளர்ச்சி அதனுல் ஏற்படும் மன உறுதி முதலியவைகளைக் காட்டுவ . போல இருதய ரேகை இருதய பலத்தை காட்டுகிறது. நெஞ்சில் உறம் வேண்டும் என்று சொல்லுவது இருதய ரேகையிலிருந்து அறிய முடியும். தயை, காருண்யம், இரக்கம், தர்ம சிந்தனை, சாந்த குணம், இனிமையாக பேசுவது, மண வாழ்க்கையில் அன்பு செலுத்துவது, பிறருக்கு உதவி புரிவது முதலிய உயர்ந்த குணங்களும், தீங்கு செய்யும் மனப்பான்மை கொலை, களவு செய்யும் மனப்பான்மை, இருதய ரேகையின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இந்த இருதய ரேகையானது புதன் மேட்டுக்கடியில் உற்பத்தியாகி குரு மேட்டிலோ, அல்லது சனி மேட்டிலோ, அல்லது, இரண்டுக்கும் நடுவிலோ முடிகிறது. பிற நாடுகளில் இருதய ரேகையின் உற்பத்தியை குரு மேட்டுக்கடியில் என்று நிச்சயிக்கிருர்கள். ஆனுல் இது தவறு. ரேகைகள் முடிவில் தான் கூர்மையாக செல்லுகிறது. உங்கள் கையைப் பாருங்கள் இருதய ரேகை புதன மேட்டுக்கடியில் (சுண்டு விரலுக்கடியில்) ஆழமாகப் பதிநது வர வர மெல்லியதாக வந்து குரு மேட்டுக்குச் சமீபமாக கூர்மையாக இருப்பது விளங்கும். நான்கு கிரக மேடுகளுக்கு கீழாக புத்தி ரேகைக்கு மேல் இருதய ரேகை அமைந்திருக்கிறது. ஆயுளை நிச்சயிப்பதற்கும் இருதய ரேகை கவனிக்கப்படுகிறது. சுண்டு விரலுக்கடியில் 25 வயதாக, நான்கு விரல்களுக்கு வயது 100 கணக்கிடப்படுகிறது. இருதய ரேகை, சனி மேட்டைத் தாண்டினுல் 70 வயதுக்கு மேல் என்று அறிக. இருதய ரேகையின் நுனி குரு மேட்டிற்கு செல்வது மிகவும் மெச்சத்தக்கது. இது நீண்ட ஆயுளை குறிப்பதோடு, விசாலமான நோக்கம், மனைவி மேல் அளவு கடந்த அன்பு, நல்ல ஒழுக்கம் முதலியவைகளை காட்டுகிறது. உயர்ந்த பதவிகளை வகிப்பார்கள். தங்களுக்கு சம அந்தஸ்து உள்ள இடங்களிலேயே சம்பந்தம் செய்துகொள்வார்கள். குரு மேட்டைத் தாண்டி இருதய ரேகை சென்ருல், அதிக மூட பக்தியை காட்டுகிறது. எதிலும் மிதமிஞ்சி நடப்பார்கள். இது நல்லதல்ல. குரு, சனி கிரகங்களுக்கு நடுவில் சென்ருல் சாதாரணமாக வாழ்வார்கள். சாந்தமும், பொருமையும் காணப்படும். பிறரின் அன்பையோ, ஆதரவையோ எதிர்பார்க்காமல் உதவி புரிவார்கள். மூன்ருவதாக, சனி மேட்டுக்கடியில், சனி மேட்டில் ஏறின பாவனையாகக் காணப்பட்டால் எல்லா குணங்களும் கலந்து காணப்படும்; ஒருதரம் பேசினதுமாதிரி மற்ருெரு முறை பேசமாட்டார்கள். இவர்களை நம்ப முடியாது. ஆனுலும் நுட்பமான அறிவு படைத்தவர்கள். விஷய சுகத்தில் அதிகம் ஆசை கொண்டவர்கள். சுய நலத்தை கருதுவார்கள். தங்கள் காரியம் முடியும் வரை ஒருவருடன் பழகுவார்கள். நிற்க, இருதய ரேகை இரண்டு மூன்று கிளைகளுடன் முடிவதுண்டு. இது உடல் வலிமை, மனோ பலம், அன்பு இம் மூன்றையும் காண்பிக்கிறது. ஆயுள், புத்தி, இருதய மூன்று ரேகைகளும் சேர்ந்து குரு மேட்டிற்கடியில் காணப்படுவது துர் அதிர்ஷ்டம். அற்ப ஆயுளை குறிக்கிறது. நன்கு அமைந்த இருதய ரேகை புத கிரகத்துக்கடியில் உற்பத்தியாகி, சற்று வளைந்து, குரு மேட்டை நோக்கி முடிகிறது. இதுவே இருதய ரேகையின் பூரண பலனைக் கொடுக்கிறது.

✷

எதிர்பாராதது

(முன் பக்கத் தொடர்ச்சி)

அவன் உள்ளே சென்ருள். சில நிமிஷங்களில் கையில்காப்பி டம்ளருடன் வெளியே வந்தாள். அவள் உடை மாறியிருந்தது. அந்த உடையில் அவள் இன்னும் அழகாக இருந்தாள்.

டம்ளரை என்னிடம் கொடுத்தாள். வாங்கும்போது அவள் கண்கள் என்னை ஆவலோடு விழுங்குவதை நான் கடைக்கண்ணுல் கவனித்தேன். அது சமயம அவள் டம்ளருடன் கையும் சேர்ந்து என்னிடம் கொடுத்தாள்.

“சாந்தா.........”

“ஹூம்”

“சரிவர்மாவந்துடப்போருன். ஏற்கனவே...”

“அவனுக்கு நன்ருகத்தெரியும். இல்லாவிடில் எனக்கு எப்பொழுதே மாப்பிள்ளை தேடி முடித்திருப்பான் தெரியுமா?”

“எனக்கு ஒன்றுமே தெரியாதே! அவனும் கடிதமும் போடவேயில்லையே”

“அதெல்லாம் உங்கள் அம்மா ஏற்பாடு. உங்கள் படிப்பு முடியும்வரை அதுபற்றி பேசக்கூடாது என்றும் பின் என்னை உங்களுக்கு கலியாணம் செய்து வைப்பதாயும் உங்கள் அம்மா என் அம்மாவுக்கு வாக்கு கொடுத்திருக்கிருளாக்கும்” என்ருள் சாந்தா.

குவாலிடி காப்பி
திருச்சி.
TRADE MARK

தாம்பூலத்திற்கு
மைதீன்
புகையிலை
மேலானது
E. S. MYDEEN & Co.
இ. எஸ். மைதீன்
TRADE MARK
KUMBAKONAM.

சலவைக்கு சிறந்த சோப்
J. 101
பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்
வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன
ஒவ்வொரு வீட்டிலும் தின கால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.
J. 101-பார் சோப்புகள்
வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.
ஜோதி சோப் ஒர்க்ஸ்
கரூர்.
J. 101 மார்க்
பார்த்து வாங்கவும்.

டோங்ரேயின்—
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு
பிரசித்திபெற்ற டானிக்

சூதகத்தை நிறுத்தியது.
குமரி (Tablets) சூதகக் கோளாறுகளை எந்த நிலையிலும் நிறுத்த வல்லது. நிலைமை விளைவிக்காமல் கஷ்ட நிவர்த்தியளிக்கிறது. ஆயிரக்கணக்கானவர்கள் திருப்தியடைந் திருக்கின்றனர். விலை ரூ. 3 நாள்பட்ட கோளாறுகளுக்கு விலை ரூ. 5 மிகக் கடுமையான கோளாறுகளுக்கு ரூ. 8 கர்ப்பத் தடை மாத்திரைகள் (Tablets) 6 மாத உபயோகத்திற்கு விலை ரூ. 4

(வி. பி. க்கு 12 அணு அதிகப்படி.)
Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93. China Bazaar Rd. MADRAS

வளரும் விஞ்ஞானம்

வைரத்தையும் வெல்லும் டைட்டேனியம்

கடற்கரைகளிலும், நதியோரங்களிலும் மணலில் ஒரு பொருள் பளிச் பளிச்சென்று மின்னுவதை அநேகமாக சகலரும் கவனித்திருக்கலாம். மின்னும் இக்கருமணலுக்கு ஆங்கிலத்தில் இல்மினைட் என்று பெயர். இதிலிருந்து தயாரிக்கப்படும் டைட்டேனியம் ஆக்ஸைட் என்பது தற்காலத்தில் அநேகவித கைத்தொழில்களுக்குப் பயன்படுகிறது.

விஞ்ஞானிகள் இதுவரை கண்டுபிடித்துள்ள பசைப்பொருள் (Pigment) களில் டைட்டேனியம் ஆக்ஸைட் (Titanium) என்பதுதான் விசேசக்தி வாய்ந்திருக்கிறது. இப்பொருள் பிரிட்டனில் பிலிங்ஹாம் என்ற இடத்தில் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. டைட்டேனிய உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்காக இங்கிலாந்தின் கிழக்குக் கடற்கரையிலுள்ள கிரிம்ஸ்பி என்ற ஸ்தலத்தில் ஒரு பிரமாண்டமான தொழிற்சாலையும் திறக்கப்படவிருக்கிறது.

டைட்டேனியம் தற்போது வர்ணப்பசைகள் இது சம்பந்தப்பட்ட இதர பொருள்கள், தயாரிப்பதில்தான அதிகம் உபயோகப்படுகிறது. என்றாலும் டைட்டேனியப்பசை வேறு பல தொழில்களுக்கும் கணிசமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சாதாரணமாக சித்திரக்காரர்களுக்கான வர்ணங்கள், அச்சிடும் மை, செயற்கைத்தோல், தோல்களுக்கான பாலிஷ், செயற்கை பிளாஸ்டிக் ஆகிய தொழில்களில் டைட்டேனியம் உபயோகப்படுகிறது.

கண்ணாடி, பீங்கான், சிமிட்டி, செயற்கை பளிங்குக்கற்கள் ஆகியவைகளுக்கு புதுவிதமான தோற்றத்தையும் பளபளப்பையும், வழவழப்பையும் அளிக்க டைட்டேனியம் அதிகம் உதவுகின்றது. இச்சாமான்களின் மீது டைட்டேனிய மெருகு கொடுப்பதால் அவைகளுக்கு உலகில் நல்ல மார்க்கட்டுகளும் கிடைத்துவருவதாக கைத்தொழில் பிரமுகர்கள் கூறுகின்றனர். டைட்டேனியத்திலிருந்து கிடைக்கக்கூடிய பளபளப்பை வேறு எப்பொருளிலிருந்தும் பெறமுடியாதென விஞ்ஞானிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

பிரிட்டனில் தற்போது உயர்தரக காகிதம், அழகு சாதனங்கள், செயற்கைப்பட்டு முதலிய தொழில்களிலும் டைட்டேனியப்பசை உபயோகப்படுகிறது. டைட்டேனிய மெருகு கொடுக்கப்பட்ட சாமான்கள் மனதை வசீகரிக்கக்கூடியபடி அமைந்திருப்பதால் அப்பொருள்களின் விற்பனை பன்மடங்கு அதிகரிக்கலாமென நம்பப்படுகிறது,

இத்தியாதி காரணங்களால்தான் டைட்டேனிய ஆக்ஸைடின் உற்பத்தியை அதிகரிப்பதென பிரிட்டன் முடிவு செய்துள்ளது. மக்களின் அன்றாட பொருள்களின் தயாரிப்பில் அதிமுக்யத்துவம் வகிக்கும் டைட்டேனியத்தின் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டங்களுக்கு பிரபல கைத்தொழில் ஸ்தாபனங்களும் நிதித்துறையில் அதிகம் உதவி வருகின்றன.

ஆதிகாலத்தில் வர்ணபசைகளும் அவைகளின் உபயோகங்களும் மனிதன் பூலோகத்தில் தோன்றிய நாள் முதற்கொண்டு பழக்கத்திலிருந்து வருகின்றன என்றுதான் கூறவேண்டும். ஆதிகாலத்தில் மனிதன் குகைகளில் வசித்துவந்தபோதுகூட தன் "வீட்டை" கொழுப்பு, மெழுகு கலந்த பசைகளால் அலங்கரித்து வந்தானென சரித்திர நூலாசிரியர்கள் சான்று கூறுகின்றனர். ஏசு கிருஸ்து அவதரிப்பதற்கு 2500 வருடங்களுக்கு முன்பே மனிதன் வர்ணங்களை உபயோகித்து வந்தானென்பதற்கு எகிப்தில் அமிழ்ந் தெடுக்கப்பட்டுள்ள கற்சவப் பெட்டிகளின் மீது பூசப்பட்டிருக்கும் வர்ணங்களே அத்தாட்சியாகும், ஆதிகாலத்துப்பெண்கள் ஒரு விதை பசை போன்ற அழகு சாதனங்களை உபயோகித்து வந்தனரென்பதற்கும் தற்போது சான்றுகள் கிடைத்துள்ளன.

அநேக நூற்றாண்டுகளாக மனிதன் தன்னுடைய பல்வேறு தேவைகளை பூர்த்திசெய்துகொள்ள அநேகவித வெள்ளை நிறப்பசைகளைத் தயாரித்துள்ளான். வெள்ளைநிற பசைகளுக்குள் மிகப்பழமையானதென நம்பப்படும் வெள்ளீயம் சுமார் 1500-2000 வருடங்களுக்கு முன்புதான் பழக்கத்திற்கு வந்ததாக கணக்கிடப்பட்டுள்ளது. துத்தநாக ஆக்ஸைட் (Zinc oxide) 19-ம் நூற்றாண்டில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

டைட்டேனிய வரலாறு

வில்லியம் கிரகார் என்ற பாதிரி யொருவர்தான் வட இங்கிலாந்திலுள்ள கார்ன்வால் என்ற ஸ்தலத்தில் காணப்படும் கரு மணலிலிருந்து 1791 ஆண்டு முதன் முதல் டைட்டேனியத்தைக் கண்டு பிடித்தார். இக் கரு மணலுக்குத்தான் ஆங்கிலத்தில் இல்மினைட் என்றுபெயர். 1864 ஆண்டு பர்மிங்ஹாமைச் சேர்ந்த ஜே. டபிள்யூ. ரைலாந்து என்பார் இக் கருமணலை நன்கு பொடியாக்கி ஒருவித கருப்பு வர்ணபசை (Paint)யைத் தயாரித்தார். இல்மினைட்டிலிருந்து கந்தகாமில முறைப்படி டைட்டேனியம் ஆக்ஸைட் தயாரிப்பது 1908 வருடம்தான் வெற்றிபெற்றது. என்றாலும் வர்த்தகரீதியில் சுத்தமான டைட்டேனிய ஆக்ஸைட் தயாரிப்பு பிரிட்டனில் 1933 வருடம்தான் ஆரம்பமாயிற்று.

பெரிய பரிசு

ஜான் காபோட் என்பவரும் அவருடைய 3 பிள்ளைகளும் வட அமெரிக்காவைக் கண்டுபிடித்து பிரிட்டிஷ் மகுடத்துடன் இணைத்தனர். அவர்கள் தாய்நாட்டுக்கு திரும்பியபோது—அப்போது அரசு செலுத்திக்கொண்டிருந்த-ஏழாம் ஹென்றி அவர்களின் சேவையைப்பாராட்டி 10 பவுன் பரிசளித்தாராம்!

மயிர் இழை

நம்முடைய தலைமயிரின் கனத்தைத்தான் பொதுவாக மிக மெல்லியதாக கருதுகிறோம். ஆனால் மிகமிக மெல்லியது சிலந்தியின் வலை நூல். மனிதன் தலைமயிரின் கனமுள்ள ஒரு சிலந்தி நூல் தேவையானால் அதற்கு 4,000,000 சிலந்தி நூல் இழை சேரவேண்டுமாம்.

பிழைக்கமாட்டார்

வைர அரசர், பிரதம மந்திரி, ரோடிஷியாவின் ஸ்தாபகர் இவ்வளவு புகழும்படைத்த ஸெஸில் ரோட்ஸ் என்பவர் 17-ம் வயதில் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பப்பட்டார். "ஒன்று இறக்கவேண்டும் அல்லது குணமாக வேண்டும்" என்ற நோக்கத்துடன் ஹிருதய நோய் காரணமாக ஆப்பிரிக்கா அனுப்பப்பட்டார். ஆனால் அவர் தனது 49-ம் வயதில் இறக்கும் போது 6 மிலியன் பவுன்களுக்குச்சொந்தக்காரராக இருந்தார்.

'மசி' ஆறு

அல்ஜீரியா, வட ஆப்பிரிக்கா இந்த நாடுகளில் பாய்ந்து செல்லும் ஒரு ஆறு கருப்பு மையாக இருக்கிறது. அந்த நீரில் பல ரசாயன உப்புகள் கரைந்து வருவதால் தண்ணீருக்கு அந்த நிறம் ஏற்பட்டிருக்கிறதாம். இரும்புச் சத்துள்ள ஒரு ஓடையும், டானின் என்ற உப்புகலந்த ஒரு ஓடையும் இந்த நதியில் கலப்பதால் அது நிறமாக மாறி விடுகிறதாம்.

ஸெண்ட்பால்ஸ் கதீட்ரல்

லண்டனிலுள்ள உலகப்புகழ் பெற்ற ஸெண்ட்பால்ஸ் கதீட்ரலின் நீளம் 510 அடி, அகலம் 282 அடி. இதைக்கட்டி முடிக்க 35 வருஷங்கள் ஆயிற்றும். (1675-1710)

வளர்ச்சி

தென் அமெரிக்காவிலுள்ள காரகாஸ் என்ற இடத்தில் ஒரு தாவர சாஸ்திரத்தோட்டமிருக்கிறது. அங்குள்ள ஒருவகைச் செடி 6 மாதத்தில் 6000 அடி வளர்ந்ததாம். 1 மணிக்கு ஒரு அடிக்குமேலாக அதன் வளர்ச்சியைக் கண்களால் காணமுடிகிறதாம்.

மீன் விஷயம்

பூனை மீன் என்று ஒரு வகை. இவ்வகையின் ஆண் மீன் முட்டைகளை வாயிலேயே வைத்துக் காப்பாற்றி குஞ்சுகளாக்கும். அமெரிக்க ஐக்கிய மகாணத்தின் தென்கரைகளிலுள்ள ஒரு மீன் வாயில் சிப்பிகளையும் அரைக்கக் கூடிய சாதனம் இருக்கிறதாம்.

Printed at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).